மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 4 சுற்றம் : 2 பிப்ரவரி 2016 விலை : ரூ.10/- ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி



சிறந்த
மனித நேயரும்
தமிழ் ஆர்வலரும்
தொழிலதிபருமான
மதிப்பிற்குரிய
வி.ஜி. சந்தோசம்
அவர்களை சந்தித்த
சில நிமிடம்...

## தொழிலும் தொண்டும்

# கவிபாஸ்கர்

## புதிய நூல்கள் விற்பனைக்கு



**நூல்கள்**

காற்றில் மிதந்து வருகிறார் கண்ணதாசன் (கட்டுரைகள்)
பக்கம்: 176
விலை: ரூ. 150/-

வணக்கம் தோழர் (கவிதைகள்)
பக்கம்: 80
விலை: ரூ.65/-

போர்த்தொழில் (பாவரங்கக் கவிதைகள்)
பக்கம்: 112
விலை: ரூ 75/-

கூட்டாஞ்சோறு (கவிதைகள்)
பக்கம்: 120
விலை: ரூ. 100/-

**குறுந்தகடுகள்** (பாடல்கள்)

பனைமரக்காற்று
(ஈழப்பாடல்கள்)
விலை: ரூ60/-

நெருப்பின் குரல்
(ஈகியர் பாடல்கள்)
விலை:ரூ. 60/-

உயிரெழுத்து
(குழந்தைப் பாடல்கள்)
விலை: ரூ.60/-

நூல்கள் & குறுந்தகடுகள் மொத்த விலை ரூ. 575/—

**25% கழிவில் மொத்தத் தொகுப்பு ரூ. 430/-**



புல்லாங்குழல் வெளியீடு

தொடர்புக்கு: 98416 04017 / 90471 62164 / 044 24742 911

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly February 2016

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம்.ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம்.ஏ.,
**ஜெ. ராஜா சிங்,**
**ஜெய்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** பி.ஏ.,
**நாராயணன்**
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**ஜான்டேவிட்**
**பெ. அர்ஜுன்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே. பால்ராஜ்** மதுரை
**ஞா. ஜான்சன் டேவிட்** மதுரை
**டி. வி. ரமணி**
**குமார் செங்கல்பட்டு**
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**த. சுஜாதா** பி.காம்., எம்.பி.ஏ.,
V.**கணேஷ்** திருவல்லிக்கேணி
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**இரமேஷ்**

அலுவலக முகவரி
13/5 புத்தா தெரு, கோடம்பாக்கம் ,
சென்னை 600 024
அலைபேசி : 8056281973, 9444363917.
மின்னஞ்சல்:
mutram2010@gmail.com
இணைய தளம் :
www.mutram.in

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
Rangarajapuram branch.
Kodambakkam, chennai

## உள்ளே

அரசியல்வாதிகளுக்கு தொண்டுள்ளம் வேண்டும்
*தலையங்கம்*..........4

தொழிலும் தொண்டும் வி.ஜி. சந்தோசம் அவர்களுடன்
சில நிமிடம்..........6

ஈழம் வேண்டுமடி கிளியே
கவிதை..........9

முகநூலிலிருந்து..........10

நல்ல நாச்சியாள் (சிறுகதை)
தரா கார்த்திகை..........14

உண்மையைத் தேடி(14)
இராஜாசிங்..........16

உறவுகள் புத்தக வெளியீட்டு விழா..........21

கோதை நாயகியின் சீற்றம் (சிறுகதை)
இருங்கோவேள்..........24

சங்கம் 4 கருத்தரங்கம்
இமயவரம்பன்..........29

சஞ்சய் தத்தும் சமகால கைதிகளும்
அரிமாவளவன்..........32

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



தேர்தல் காய்ச்சல் தமிழகத்தை தன்வசப்படுத்தத் தொடங்கிவிட்டது. முக்கய நிர்வாகிகளும் கட்சிக் காரர்களும் கட்சி தாவும் நிகழ்வுகள் அதிகமான அளவில் நடக்கத் தொடங்கியிருக்கின்றன. இந் நிலையில் தேர்தல் ஆணையம் வெளியிட்ட வாக்காளர்கள் பட்டியலில் இறந்தவர்களின் பெயர்களும் போலியான பெயர்களும் சேர்க்கப்பட்டுள்ளதாக கட்சிகள் கச்சை கட்டிக் கொண்டு நிற்கின்றன.

தேதி அறிவிக்கப்படாத நிலையிலும் அவரவர் நிலையில் கட்சித்தலைவர்களும் நிர்வாகிகளும் இப்போதே பரப்புரையை ஆரம்பித்து பரபரப்புடன் செயல்பட ஆரம்பித்து விட்டார்கள். பலர் வேட் பாளர்களையே அறிவித்து வேலையைத் தொடங்கி விட்டார்கள்.

இந்தத் தேர்தல் எப்படி இருக்கும்? யார் பெற்றி பெறுவார்கள் என்பது பற்றிய கருத்துக் கணிப்புகளும் மக்களின் உரையாடல்களும் உலா வரத் தொடங்கி விட்டன. மக்களில் பெரும் பாலானோர் அவர்கள் இல்லாவிட்டால் இவர்கள், இவர்கள் இல்லாவிட்டால் அவர்கள் என்ற நிலையிலேயேதான் இருக் கின்றனர். ஆள்பவர் களைவிட திராவிட முன்னேற்றக் கழகம் பரவாயில்லை என்ற மனப்போக்குதான் மக்களிடத்தில் பெரும்பாலும் காணப்படுகிறது. கூட்டணி நினைத்தபடி அமையும் பட்சத்தில் நாங்கள்தான் அடுத்து ஆட்சி அமைப்போம் என்று அக்கட்சியினர் கூறுகின்றனர். மக்களும் அதை ஆதரிப்பதாகத்தான் தெரிகிறது.

முன்னாள் துணை முதல்வர் தொடர்ந்து மக்களை நேருக்கு நேராகச் சந்தித்து வருவது அவர்களுக்கு இன்னும் பலம் சேர்ப்பதாகவே இருக்கிறது. தமிழ் அமைப்புகள் ஒன்று சேராது என்ற நிலையில் இரு

# அரசியல்வாதிகளுக்கு தொண்டுள்ளம் வேண்டும்!



பெரும் கட்சிகளில் ஒன்றுதான் ஆட்சியைப் பிடிக்கும். அப்படிப் பார்த்தால் தி.மு.க.தான் அப்போட்டியில் முன்னணியில் இருக்கிறது என்பது தெளிவாகப் படுகிறது. திமுக வைப் பொறுத்தவரை உட்கட்சிப் பூசல் இருந்தாலும் மக்கள் ஸ்டாலின் அவர்களை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். நிர்வாகிகளை விட பொது மக்கள்தான் ஸ்டாலின் பக்கம் இருக்கிறார்கள் என்ற நிலை காணப்படுகிறது.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தமிழகத்தின் ஆட்சி திமுக, அதிமுக என்று மாறி வந்து கொண்டிருக்கிறது. அந்த வகையில் இது திமுக வின் வாய்ப்பு என்று தொண்டர்கள் நம்பிக்கை தெரிவிக் கிறார்கள். எப்போதுமே ஆளும் கட்சிமேல் ஒரு அதிருப்தி மக்களிடைய நிலவும். அதுதான் தற்போதும் நிலவிக் கொண்டிருக்கிறது.

எப்படியிருந்தாலும் பொறுப்பேற்கப் போகும் புதிய ஆட்சி பல சவால்களை எதிர்கொள்ள வேண்டி யிருக்கும் என்பது மட்டும் உண்மை. அத்தனை சிக்கல்கள் தமிழகத்திலே இருக்கின்றன. ஆட்சி அமைக்கும் ஆட்சியாளர்கள் மக்களை இனி ஏமாற்ற முடியாது. மக்கள் விழிப்படைந்து விட்டனர். சமூக வலைதளங்கள் விரிவடைந்து நிகழ்வுகளை உடனுடக்குடன் உலகிற்கு கொண்டு வந்து விடுகின்றனர்.

ஆகவே இனி வரும் ஆட்சியாளர்கள் தங்களை தூய்மைப்படுத்திக் கொள்வதோடு தொண்டு என்ற ஆடையை அணிய தயாராக வேண்டும். ●

## சனவரி 25-ஐ தமிழ் மொழி நாளாகத் தமிழ்நாடு அரசு கடைபிடிக்க வேண்டும் தமிழ்த் தேசியப் பேரியக்கம் மொழிப்போர் - 50 மாநாட்டில் தீர்மானம்

இந்தித் திணிப்பைத் தடுத்து நிறுத்திட 1938 மற்றும் 1965ஆம் ஆண்டுகளில் உயிர் ஈகம் செய்தோர், சிறை சென்றோர் ஆகியோரின் ஈகத்திற்கு வீரவணக்கம் செலுத்தவும், போராடியோரின் வீரத்தை நினைவு கூர்ந்து போற்றவும் சனவரி 25ஆம் நாளை வீரவணக்க நாள் என்று கடைபிடித்து வருகிறோம்.

அயல்மொழி ஆதிக்கத்தைத் தடுத்திடவும் தங்கள் தாய்மொழி காத்திடவும் 1965 சனவரி 25இல் மாணவர்கள் தொடங்கிய போராட்டம் மாபெரும் மக்கள் போராக ஐம்பது நாள் நடந்தது.

இம்மொழிப்போரில் முந்நூற்றுக்கும் மேற்பட் டோர் காவல்துறையினராலும் இந்தியப் படைத் துறையினராலும் சுட்டுக் கொல்லப்பட்டனர். சற்றொப்ப பத்துப்பேர் தீக்குளித்தும் நஞ்சுண்டும் மடிந்தனர். இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு எந்திரங்கள் முற்றாக செயல்பட முடியாமல் பல நாட்கள் முடக்கப்பட்டன.

அயல்மொழி ஆதிக்கம் தடுத்திடவும் தங்கள் தாய்மொழி காத்திடவும் தமிழ்நாட்டில் நடந்த அளவிற்கான மொழிப்போரும் உயிர் ஈகங்களும் உலகத்தில் வேறெங்கும் நடந்ததில்லை.

இவ்வாறான இன உணர்ச்சியும் மொழி உணர்ச்சி யும் ஒவ்வொரு தமிழர் நெஞ்சிலும் எப்போதும் உள்ளுறையாகக் கனன்று கொண்டுதான் இருக்கின்றன. அதற்கு முதற்பெரும் காரணம் உலகின் மூத்த முதல்மொழியாகவும் முதல் செம்மொழியாகவும் உள்ள தமிழ்மொழியின் உட்கூறாக உள்ள உயிர்ப்பும் ஆற்றலும் ஆகும். இரண்டாவது காரணம் அவ் வுணர்ச்சியை எழுப்பிவிடும் இயக்கங்களின் மனித முயற்சியும் ஆகும்!

இன்றும் தமிழ் மீது அயல்மொழிகளான இந்தி, ஆங்கிலம், சமற்கிருதம் ஆகியவற்றின் ஆதிக்கம் மேலும் மேலும் கூடுதலாகி வருகிறது. இவற்றின் ஆதிக்கத் திற்கு அரசுகளின் ஆதரவும் சமூக ஆதிக்க ஆற்றல் களின் ஆதரவும் வலுவாக உள்ளது.

உலகமயப் பொருளியல் சந்தை, உலகத்தைக் கவ்வி, ஒவ்வொரு தேசிய இன அடையாளங்களையும் அத்தேசிய இனங்களின் தேசிய மொழியையும் அழித்து வரும் காலம் இது. ஒன்றை அழிப்பது அதனிடத்தில் இன்னொன்றை நிறுத்துவதற்கே! ஐரோப்பிய நுகர்வுப் பண்பாட்டையும் ஆங்கிலமொழியையும் உலகெங்கும் திணிக்கும் முயற்சி வெவ்வேறு தன்னல ஆற்றல்களின் பொது உத்தியாக உள்ளது. பாதிக்கப்பட்ட இனங் களைச் சேர்ந்த மக்கள் ஆங்கில மொழியை மொழிக் கொலையாளி (லிணீஸீரீனு,ணீரீமீ ரிவீறீறீமீக்ஷீ என்றே கொந்தளிப் போடு குறிப்பிடுகின்றனர்.

மேற்கண்டவாறான புறச்சூழல்கள் தமிழ் இனத்தை யும் தமிழ்மொழியையும் தாக்குகின்றன. இவற்றிலிருந்து தற்காத்துக் கொள்ளவும் தமிழ்த் தேசிய இன அடை யாளத்தைப் பாதுகாத்துக் கொள்ளவும் தமிழ்மொழி மற்றும் பண்பாட்டை வளர்க்கவும் வலுவான புதிய முயற்சிகளை எடுக்க வேண்டிய தேவை தமிழ் மக்களுக்கு உள்ளது.

எனவே, நாம் இதுவரை, வீரவணக்க நாள் என்று கடைபிடித்து வரும் சனவரி 25ஐ தமிழ்மொழி நாள் என்ற பெயரில் கொண்டாட வேண்டுமென்று தமிழ்ப் பெருங்குடி மக்களை மொழிப் போர் 50 மாநாடு கேட்டுக் கொள்கிறது.

# தொழிலும் தொண்டும்

## உயர்மிகு வி. ஜி. சந்தோசம் அவர்ளுடன் சில நிமிடங்கள்

சென்னை மக்களை செயலிழக்கச் செய்த மழை வெள்ளத்தின் வேகம் குறைந்து கொண்டிருந்த சமயம், சிறந்த மனித நேயரும் தமிழ் ஆர்வலரும் தொழிலதிபருமான மதிப்பிற்குரிய வி.ஜி. சந்தோசம் அவர்களைச் சந்தித்தோம். நாம் பேசிக் கொண்டிருக்கும் போதே செயலாளரை அழைத்து, தொலைபேசி மூலம் யாருக்கோ இணைப்புக் கொடுக்கச் சொல்லி, அவர்களிடம் ஒரு முகவரியைச் சொல்லி, உணவும், தண்ணீரும் அனுப்பச் சொல்லிவிட்டு நம்மிடம் பேசினார்.



தொழிலால் வளர்ந்தோம்! தமிழால் பெருமை பெற்றோம். என்ற அனுபவ வாக்கியத்துடன் நம் நேர்காணலுக்கு தயாரானார். உங்களது வாழ்வில் நடந்த முக்கிய நிகழ்வுகள் பற்றிச் சொல்லுங்கள் என்று ஒரே ஒரு பதிலுக்காக அவரது வாய்மொழியை கவனித்தபோது, அனுபவங்களைச் சொல்லிக் கொண்டே இருந்தார்.

“தொழிலும் தொண்டும்.“ என்ற இந்த வாக்கியத்தை ஆதிமுதல் இன்றுவரை கடைபிடித்து வருகிறோம். தொழிலைச் செய்தோம். அதன்மூலம் தொண்டுகளைச் செய்து வருகிறோம். குறிப்பாக தமிழ்த்தொண்டினை தலைமைத் தொண்டாகவே எண்ணி செய்து வருகிறோம்.

ஒருமுறை தமிழறிஞர்களை அழைத்துக் கொண்டு 9 நாள் பயணமாக அந்தமான் சென்றோம். அப்படிச் செல்லும்போது கப்பலிலேயே கவியரங்கம், பட்டிமன்றம், உரைகள் என்று நடத்தினோம். மூன்று நாட்கள் அந்தமானில் அதே போல் கவியரங் கங்களையும் பட்டிமன்றங்களையும் இலக்கிய உரைகளையும் தமிழறிஞர்கள் நிகழ்த்தி னர். அந்தமானிலிருந்து தாயகம் திரும்புகையிலும் தமிழ்மொழி போற்றும் பல நிகழ்வுகளை நடத்தி னோம். அந்தச் செலவுகள் முழுவதையும் விஜிபி குழுமமே ஏற்றது. தமிழறிஞர்களின் முகத்தில் நிறைவைக் கண்டோம். இது ஒரு மறக்க இயலாத நினைவுப் பெட்டகம்.

ஒருமுறை மதநல்லிணக்க மாநாடு திருச்சியில் நடந்தது. அப்போது ஜீயர் அவர்களை பார்க்கச் சென்றபோது அனுமதி மறுக்கப்பட்டது.

செய்தி கேள்விப்பட்டு பலர் வந்து அண்ணாச்சி பொதுவானவர் என்று வாதிட்டுப் பார்த்தனர். அனுமதிக்கவில்லை. நான் உடனே அந்த இடத்திலேயே பாட ஆரம்பித்தேன். தொடர்ந்து பல நிமிடங்கள் பாடினேன். இதை அறிந்த ஜீயர் அவர்கள் என்னைப் பாராட்டி கவிச்சக்கரவர்த்தி என்றும் தென்னாட்டுக் கம்பர் என்றும் பாராட்டி விருது வழங்கினார். “மதங்களை மதித்து மனதால் ஒன்று சேர வேண்டும்” என்பது எங்களது வாழ்வியல் வாசகங்களில் ஒன்று.

எம். ஜி. ஆர் அவர்களை ஒருமுறை டெல்லியில் நான் சந்தித்தபோது, அவரிடம் மவுண்ட் ரோட்டில் எங்களது விற்பனை நிலையம் இருக்கிறது என்று சொன்னேன். அப்போது அவர், “மவுண்ட் ரோடு என்று சொல்லாதீர்கள், அண்ணா சாலை என்று சொல்லுங்கள்“ என்றார்.

எக்ஸ்போ 70 என்ற விழா சிங்கப்பூரில் நடந்தது. அந்த நிகழ்விற்கு நாங்கள் குடும்பத்துடன் சென்றிருந்தோம். எம்.ஜி.ஆர் குடும்பமாக வந்திருந் தார். எங்கள் குடும்பம் எம் ஜி ஆர் அவர்களோடு மிகவும் நெருங்கிய குடும்பம். நிகழ்வுகள் முடிவதற்கு முன்னதாகவே நாங்கள் சென்னைக்குத் திரும்பி னோம். எம் ஜி ஆர் அவர்களிடம் விடைபெற்றுத் தான் வந்தோம். சென்னை விமான நிலையத்தில் இறங்கியதும் எம்.ஜி.ஆர் அவர்களின் மேலாளர் பத்மநாபன் அவர்கள் மாலையோடு எங்களை வரவேற்றார். “நீங்கள் எங்கே இப்படி?“ என்று அவரிடம் கேட்டபோது, எம்.ஜி.ஆர் அவர்கள்தான் போன் செய்து மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வி. ஜி. பி குடும்பத்தை மாலை போட்டு வரவேற்கச் சொன்னார் என்றார். நான் வியந்து மகிழ்ந்தேன். எம்.ஜி.ஆர் அவர்கள் ஒரு அதிசயப்பிறவி.

எம்ஜிஆர் அவர்களது இல்லத்தில் இயங்கிவரும் காது கேளாதோர் பள்ளிக்கு வி. ஜி. பி. குழுமம் உதவிகள் செய்து வருகிறது.

தமிழறிஞர் கி.ஆ.பெ விசுவநாதம் அவர்களுக்கு 18அடி உயரத்தில் நினைவுத்தூண் வி. ஜி. பி. நிறுவனத்தின் மூலமாக அமைத்தோம்.

உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் உட்பட 75 கவிஞர்களை விமானத்தில் முதன் முதலாக மதுரைக்கு அழைத்துச் சென்று அங்கே டவுன் ஹாலில் நிகழ்ச்சிகள் நடத்தி முடித்து மறுபடியும் விமானத்திலே சென்னைக்கு வந்தோம்.

எங்களது வி. ஜி. பி பிலோமினாள் பள்ளியில் பத்தாம் வகுப்பு வரை படிக்கும் பிள்ளைகளில்133 பிள்ளைகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு திருவள்ளுவர் போன்ற வேடத்தை ஒப்பனைக் கலைஞர் மூலம் தந்து, தொடர் வண்டியில் அவர்களை அனைவரையும் அழைத்துச் சென்றோம். இது போன்ற எண்ணற்ற தாய்மொழித் தொண்டுகளை தொடர்ந்து செய்து வருகிறோம்.

எங்களது அண்ணாச்சி பன்னீர்தாஸ் அவர்களின் பன்னிரண்டாம் வயதில் தான் நாங்கள் எல்லாம் சென்னை சென்னைக்கு வந்தோம். அண்ணாச்சி பன்னீர்தாஸ் அவர்களின் புதல்வன் ரவிதாசின் பன்னிரண்டாம் வயதில் அமெரிக் காவுக்கு ரவிதாசை அழைத்துச் சென்றோம். எங்களது அம்மா சந்தனம்மாவை உலகம் முழுவதும் அழைத்துச் சென்றோம்.

ஒருமுறை அம்மாவையும் மனைவியையும் ஜப்பான் நாடு அழைத்துச் சென்றேன், அடுத்து தாய்லாந்து அழைத்துச் சென்றேன். என் பர்ஸ் அப்படியே இருந்தது காரணம் அவர்களுக்கு அந்த நாட்டின் மொழிகள் தெரியாது. அங்கிருந்து அடுத்ததாக சிங்கப்பூர் வந்தவுடன் எனது பர்ஸ் காலியாகிப் போய்விட்டது. எனது தாய், துணைவியாருடன் ரோம்நகர் சென்று போப் அவர்களைச் சந்தித்ததும் லண்டன் ஆர்ச் பிசப்பைச் சந்தித்ததும் மறக்க முடியாத நிகழ்வுகள்.

ஒருமுறை அம்மாவிற்கு உடல் நலமில்லாமல் தேவகி மருத்துவமனையில் சேர்த்திருந்தோம். நான் எனது அலுவலகத்தை அங்கேயே மாற்றிவிட்டேன். ஒரு மாதத்திற்கும் மேலாக எனது மகள் செல்வி பாட்டியின் அருகிருந்து சேவை செய்தாள். குணமாகி வந்தவுடன் பேத்தி செல்விக்கு 10 பவுன் செயின் தந்தார்கள். பாட்டிக்கும் பேத்திக்கும் அப்படியொரு அன்பு இருந்தது. அதன் பிறகு மறுபடியும் உடல்நிலை பாதிக்கப்பட்டு விஜயா மருத்துவமனையில் சேர்த்திருந்தோம், மருத்துவர்கள் வீட்டுக்கு எடுத்துப் போய்விடுங்கள் என்று சொல்லி விட்டார்கள். தந்தை நவமணி என்பவர் அவஸ்தை பூசை கொடுத்தார்கள். அதன் பின்பு எங்களது தாய் இறைவனிம் சென்று விட்டார்கள்.

எங்களுக்கு, எங்கள் அம்மா கூறிய அறிவுரை என்னவென்றால் "அன்பைக் காட்ட வேண்டும். வசதியைக் காட்டக்கூடாது, சேவை செய்ய வேண்டும்" என்பதுதான். அந்த உத்தமத்தாயின் அறிவுரையை இன்றும் பின்பற்றி வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

அண்ணாச்சி வழியில்தான் நான் சென்றேன். இன்றும் அவர் வழிகாட்டுதல்தான். அண்ணாச்சி அவர்கள் பிறந்தது 1932 ஆம் ஆண்டு. நான் 1936 ஆம் ஆண்டு பிறந்தவன். எங்களது ஒற்றுமை நாடறியும். ஏதாவது பொருள் வாங்கினால் ஒரே மாதிரிதான் வாங்குவார் எங்களுக்குள் உயர்வு தாழ்வு இருந்ததில்லை. அவர் எது செய்தாலும் நான் கேட்க மாட்டேன். அவர் மிகச் சரியாகச் செய்வார்.

நான் எனது வாழ்க்கையைச் சொல்ல வேண்டு மென்றால், முதலில் டீக்கடையில் வேலை செய்யும் டீக்கடைப் பையன், அடுத்து வீட்டுக்கு வீடு செய்தித் தாள்கள் போடுவது என்று தொடர்ந்து, அதன் பிறகுதான் தவணை முறையில் பொருட்கள் விற்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வெற்றி பெற்றோம். நாங்கள்தான் தவணைமுறைத் திட்டத்தின் முன்னோடிகள்.

நரிக்குறவர்கள் சமுதாயத்தில் இருந்து விலகி நின்றவர்கள். அவர்களை மக்கள் திருடர்கள் என்று நினைத்த காலங்கள் உண்டு. அந்தக் காலங்களிலே நரிக்குறவர்களை அலுவலகத்திற்குள் அழைத்து அமர வைத்து தேநீர் கொடுத்து உபசரித்து, வானொலிப்பெட்டிகளை தவணை முறையில் விற்றது என்பது எங்களது தொழிலில் நாங்கள் சாதித்த நாட்களாகும்.

மரியாதைக்குரிய சா. கணேசன் அவர்கள் தலைமையில் நரிக்குறவர்களுக்கும் சாதாரண மக்களுக்குமான கால்பந்து போட்டி ஒன்று நடத்தி னோம். ஒருபக்கம் நரிக்குறவர் அணி, மற்றொரு பக்கம் அவர்கள் அல்லாத கால்பந்தாட்ட அணி. பல முறை அவர்கள் கால்பந்தை கைகளால் பிடித்தது சிரிப்பாக இருந்தது. சமுதாயத்தில் நல்ல மாற்றங்கள் ஏற்பட அவ்வப்போது நாங்கள் பல முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

வீடுகளுக்கு செய்தித்தாள்கள் போடும் காலங்களில் காலை நான்கரை மணிக்கு எழுந்து பேப்பர் போட வேண்டும். அப்போது எனக்கு மாதம் 13 ரூபாய் சம்பளம் 1950இல் கலைவாணர் என். எஸ். கே, நடிகை ராஜகுமாரி, பச்சைத் தமிழர் காமராஜர், எம். கே. டி. பாகவதர் வீடுகளுக்கு நான் செய்தித் தாள் போடுவோன். அப்போதெல்லாம் அவர்களைப் பார்க்க முடியுமா என்ற ஏக்கம் தினம் தினம் எழுந்ததுண்டு. ஆனால் பார்த்ததில்லை. பின்நாட் களில் அவர்களுடன் உரையாட வாய்ப்புக் கிடைத் ததை எண்ணி இன்று மகிழ்ச்சி அடைகிறேன்.

சிறுவயதில், "பெருந்தலைவர் காமராசர் டெல்லி சென்று தலைமை அமைச்சர் நேருவைச் சந்தித்தார்" என்று பத்திரிகையில் வந்தால் அதை மாற்றி வி. ஜி. சந்தோசம் காமராசரைச் சந்தித்தார் என்று வாசித்துப் பார்ப்பேன். நான் வாசித்தது நடந்தது. நான் பெருந்தலைவரைச் சந்தித்தேன்.

சென்னைக்கு வந்ததும் நான் பார்த்தது ராமகிருஷ்ணா பள்ளியைத்தான். அந்தப் பள்ளியில் படிக்க மாட்டோமா என்று ஏங்கிய காலம் உண்டு. எனக்கு படிப்பிலே மிகுந்த ஆர்வம் உண்டு. நான் ஏழாம் வகுப்பு வரைதான் படித்திருந்தேன். நாங்கள் டீக்கடை நடத்திக் கொண்டிருந்த போழ்து, நான்கு ஆசிரியர்கள் எங்கள் டீக்கடைக்கு தேநீர் அருந்த தொடர்ந்து வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் திருமணம் ஆகாதவர்கள். அவர்களிடம் கேட்டு படித்தேன். இரவு பத்து மணிக்கு மேல் படிப்பு. நான்கு குழந்தைகள் பிறந்த பிறகு மெட்ரிகுலேசன் எழுதி தேர்ச்சி பெற்றேன்.

நான் இதுவரை ரஷ்ய நாட்டுக்குச் செல்ல வில்லை. அதுவும் நிறைவேறப் போகிறது. அங்கே தெய்வப்புலவர் திருவள்ளுவர் சிலையை நிறுவப்போகிறேன். விரைவில் ரஷ்யா செல்ல இருக்கிறேன் என்று கூறி தனது நேர்காணலை நிறைவு செய்தார் வி. ஜி. சந்தோசம் அவர்கள்.

மனித மாண்புகளும் தமிழுணர்வும் தொண்டுள் ளமும் உழைப்பும் தன்னகத்தே கொண்ட வி. ஜி. சந்தோசம் அவர்கள் உலகமெல்லாம் திருவள்ளுவர் சிலைகளை நிறுவியிருக்கிறார். நாம் தருண் விஜயைப் பாராட்டுகிறோம் தவறில்லை. மண்ணின் மைந்தரான ஒப்பற்ற தமிழர் வி. ஜி. சந்தோசத்தை பாராட்டாமல் இருக்கலாமா? பாராட்டுவோம். வி.ஜி. சந்தோசம் அவர்களைப் பாராட்டுகிறவர் களையும் நாம் பாராட்டுவோம்.

# ஈழம் வேண்டுமடி கிளியே

ஈழம் வேண்டுமடி கிளியே – தமிழ்
ஈழம் வேண்டுமடி கிளியே
ஆள வேண்டுமடி கிளியே – தமிழ்
ஆள வேண்டுமடி கிளியே

பாடும் தமிழ் இனத்து மொழியும்
நாடும் தமிழ் இனத்து நாடும்
காடும் பூ நிறைந்த காடும் – அந்த
நாட்டில் தலை நிமிர்ந்த நாடு

மானம் தலை நிமிர்ந்த மானம்
பேணும் தமிழ்க் குடியின் ஊரில்
வானம் தலை குனிந்து போற்றும் – அதில்
ஊனம் இல்லையடி கிளியே

கூனல் வளை உலவும் கரையில்
கானல் எழுவதில்லை மணலில்
ஆழி இசை மெளிரும் திரையில்
உருமீனோ கவி எழுதி வரையும்

தென்னை மரம் எழுதும் தமிழில்
பாடல் இசைக்குமடி ஓலை
கூடல் பனை முழுதும் ஊடல்
அந்த நாடே இனிக்குமடி கிளியே

உச்சி முகரும் தமிழ்க் காற்றும்
நொச்சி மரக் கிளையின் கீற்றும்
பிச்சிப் பூவில் எழும் வாசம் – அதில்
பாடி ஆடும் தமிழ்ப் பாட்டு

பச்சைக் கிளிகள் தரும் பேச்சும் – பட்டி
ஆவில் எழுந்து வரும் மூச்சும்
நெஞ்சைப் பிழிந்துருக்கும் அந்த ஓசை
என்னைத் தூங்கச் செய்யுமடி கிளியே!

நாவல் மரத்து நிழல் வரையும்
நம்மைப் போல நிழல் அசைய
பாடாய்ப் படுத்தும் அந்த நிழலே
என்னைக் கட்டித் தழுவுமடி கிளியே!

ஆடும் மயில்கள் ஒரு கூட்டம்
பாடும் குயில்கள் ஒரு கூட்டம்
தாவும் மான்கள் ஒரு கூட்டம்
எங்கள் மண்ணின் இனிமையடி கிளியே!

இச்சை தொலைத்த அந்த மண்ணும் – குடி
வாழ்வில் அன்புருகும் பெண்ணும் – அந்த
மண்ணின் பெருமையடி கிளியே – ஈழ
மண்ணின் ஒளியுமடி கிளியே!

தாகம் தீர்த்துக் கொள்ள இளநீர்
பாகாய்ப் பிழிந்த சுவைப் பழநீர்
ஊற்றே ஆகும் நல்ல பதநீர்
எந்தன் நாடே உயர்ந்தபடி கிளியே

ஈழம் வேண்டுமடி கிளியே – தமிழ்
ஈழம் வேண்டுமடி கிளியே
ஆள வேண்டுமடி கிளியே – தமிழ்
ஆள வேண்டுமடி கிளியே!

தொடரும்....

**தரா கார்த்திகை.**





# முகநூலில் இருந்து...

இப்போதுள்ள இளைய தலைமுறைப் பெண்கள் தங்களை அழகு படுத்திக்கொள்கிறோம் என்ற பெயரில் தங்கள் ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொள்ளுகிறார்கள்.

புருவ முடிகளைத் திருத்துகிறோம் (த்ரெட்டிங்) என்ற பெயரில் தங்கள் வாழ்நாளைக் குறைத்துக் கொள்கிறார்கள். புருவ முடிகள் என்பவை உயிர் இயங்கும் இடங்கள். இறப்பு நெருங்கி வரும் பொழுது புருவமுடிகள் தொட்டாலே கையோடு வந்துவிடும். உடலின் உயிர்த்தன்மை தீர்ந்து போய் விடுவதாலேயே புருவ முடிகள் கொட்டிப்போய் விடுகின்றன.

இந்த புருவ முடிகளைத் திருத்துகின்றபோது நிச்சயமாக உடல்நிலைப் பாதிப்பு ஏற்படுகிறது.



இதைச் செய்வதால் பெண்களின் உயிர்ச்சக்தி குறைகின்றது. விளைவு குறைவான உயிர்ச் சக்தியால், ஆயுளும் குறைந்து, உயிர்ச் சக்தி குன்றிய குழந்தை களையும் பெற்று ஆராக்கியக் குறைவான சமுதாயத் திற்கே வித்திட்டு விடுகின்றனர். இவை ஆயுளைக் குறைப்பதுடன் பல பெரும் நோய்களுக்கும் காரணம் ஆகின்றன. பல ஆங்கில மருத்துவத்துக்கு, உயிர் எங்கே நிலை கொண்டிருக் கிறது. அதை சிதைத்தால் என்ன விளைவுகள் நேரும் என்பது தெரியாது. இதனால் பல ஆங்கில மருத்துவர்கள் கத்திகளை வைக்கக் கூடாத இடத்தில் வைத்து பலரை பரலோகம் அனுப்பி விடுகிறார்கள்.

வர்மங்களில் நிலை கொண்டிருக்கும் மின்காந்த சக்தியை எந்த வழியிலும் சிதைப்பது கூடாது. மேலும் உடலின் முக்கிய சக்திப்பாதைகள் கண் களுக்கு அருகில் ஓடுகின்றன.

எனவே இந்த இடங்களில் கை வைப்பது நமக்கு நாமே தலைக்கு கொள்ளி வைத்துக் கொள்வது போல ஆகும். இதை உணர்ந்து நம் நாட்டுக் கலாச்சாரத்திற்கு ஏற்றார் போல் பெண்கள் நல்ல சுத்தமான விளக் கெண்ணையை கண் புருவங்களில் தீட்டுவதானா லும், கண்ணில் இட்டு வருவதனாலும் வாழ்நாட்களையும் காத்து நீட்டித்து? நல்ல உயிர்ப் புடனும் வாழ முடியும்.

**துரை**

# Alliance Clubs International

**District - 160, Chennai**

*Invitation For*

## 4th ANNUAL DISTRICT CONVENTION
## INAUGURATION OF 10 NEW CLUBS
## DISTRICT CABINET INSTALLATION

**Date: 13.02.2016**, Saturday, 6.00 pm

**Venue: UMAPATHY AUDITORIUM,** Anna Salai, (Anand Theatre), Chennai - 2

ANNUAL DIST. CONVENTION PROCEEDINGS BY

**Ally. Dr. P. MAHALINGAM,** District Governor - 160

**Ally. R. MATHIVANAN, SLF** - Charter District Governor - 160

INDUCTION OF NEW MEMBERS & INSTALLATION OF NEWS CLUBS PRINCIPAL OFFICERS

**Ally. Dr. P. SANTHAMMA, SLF,**

Alliance International 2nd V.P

DISTRICT CABINET INSTALLATION BY

**Ally. PALAPARTHI SUBBA RAO, SLF,**

Alliance International President

INAUGURATION OF SERVICE PROJECTS BY

**Ally. D.RAMSING SLF,** International Director

**Ally. Divya M.RENGAN,** International Committee Chairman

FELICITATIONS BY

**Ally. KANTHILAL D.SHAH,** PSLF, International Director

**Ally. K.RAGHUNANDAN RAO,** SLF, Multiple Secretary

**Ally. A.P.S.RAJA,** Multiple P.R.O

GUEST OF HONOUR

**Judge M.PUGHAZHENDI**

Former District & Session Judge, Poet & Novelist

**Your Presence**



**Our Pleasure**

INNER CABINET OF DIST. 160 FOR 2016 -17

**Ally. E. BALAMURUGAN**
*District Governor*

**Ally. S.THIRUMOORTHY**
*Vice District Governor - I*

**Ally. J. SUNDARRAJAN**
*Vice District Governor - II*

**Ally. J.MURALIDHARAN**
*Cabinet Secretary*

**Ally. K.SHANMUGAM**
*Cabinet Treasurer*

**Ally. HARIHARAN**
*Cabinet PRO*

**Ally. S.SEETHARAMAN, Ally. E.DILIP KUMAR**
*Cabinet Joint Secretaries*

***Deliberations : 6.00 - 8.00 pm*** — ***Dinner: 8.00 - 9.00 pm***

அல்லயன்ஸ் கிளப்பில் மாவட்ட ஆளுநராக பொறுப்பேற்கும்
நண்பர் **இ. பாலமுருகன்** அவர்களை முற்றம் இதழ் வாழ்த்துகிறது.



திருமதி. ரூபமாலிகா, திரு. சாரநாதன் அவர்களின் புதல்வி ஐஸ்வர்யாவின் பரதநாட்டியம் சென்னை வாணிமகாலில் ஜனவரி 27ஆம் தேதி நடந்தது. இந்த உருவத்திற்குள் இத்தனை திறமைகளா? என்று வியக்கும் வண்ணம் சிறுமி ஐஸ்வர்யா ஆடினார்கள். ஆடல் கலையில் தேர்ந்த ஒரு பெண் ஆடுவதைப்போல் அனைத்து முத்திரைகளும் பாவங்களும் அமைந்திருந்தன. அதோடு இடைவிடாமல் ஒரு மணி நேரம் ஆடியது வியப்புக்குரிய ஒன்றாகும். ஐஸ்வர்யா என்ற வைரத்திற்கு பட்டை தீட்டிய அவரது பரதநாட்டிய ஆசிரியர் சுமாமணி அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஐஸ்வர்யாவின் பெற்றோரும் பாராட்டுகளுக்குரியவர்களே.

விழாவில் ரெட்சன் அம்பிகாபதி, டாக்டர். இரங்கநாதன், திருமதி. கவிதா ராமு, பின்னணிப் பாடகி பூஜா, சிங்காரச்சென்னை இதழின் ஆசிரியரும் செந்தமிழ்நாடு ஊடகவியலாளர்கள் சங்கத்தின் செயலாளருமாகிய எஸ். இரங்கநாதன், முற்றம் ஆசிரியர் விசவனூர் வே. தளபதி, சிங்கம் முழக்கம் ஆசிரியர் பிரகாஷ், அரிமா பாலமுருகன், திராவிடர் குரல் ஆசிரியர் சவால்ராம் ஆகியோர் கலந்து கொண்டனர்.




அனைத்து இந்திய பத்திரிகை ஆசிரியர், வெளியீட்டாளர் சங்கத்தின் முப்பெரும் விழாவில் முற்றம் ஆசிரியரும் செந்தமிழ்நாடு ஊடகவியலாளர்கள் சங்கத் தலைவருமான விசவனூர் வே. தளபதி அவர்கள் உரையாற்றினார். மேடையில் ஓய்வுபெற்ற நீதியரசர் மாண்பமை சதாசிவம், முன்னாள் தமிழக தேர்தல் ஆணையாளர் சந்திரசேகர் ஐ.ஏ.எஸ், அனைத்து இந்திய பத்திரிகை ஆசிரியர் வெளியீட்டாளர் சங்கத்தின் தலைவர் முனைவர் எஸ். இராஜேந்திரன் அவர்கள்.



மதவெறியர்களால் இரு பிள்ளைகளோடு உயிருடன் கொளுத்தப்பட்ட இயேசு கிறிஸ்துவின் பணியாளர் கிரகாம் ஸ்டெயின்ஸ் அவர்களது நினைவாக திருமிகு இனிகோ இருதயராஜ் அவர்களது சீரிய தலைமையில் இயங்கும் கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கம் கருத்தரங்கத்தை ஏற்பாடு செய்து அவருக்கு புகழஞ்சலியும் மலர்அஞ்சலியும் மௌன அஞ்சலியும் செலுத்தியது.



அனைத்து இந்திய பத்திரிகை ஆசிரியர், வெளியீட்டாளர் சங்கத்தின் முப்பெரும் விழாவில் முன்னாள் தமிழக தேர்தல் ஆணையாளர் சந்திரசேகர் ஐ.ஏ.எஸ், அனைத்து இந்திய பத்திரிகை ஆசிரியர் வெளியீட்டாளர் சங்கத்தின் தலைவர் முனைவர் எஸ். இராஜேந்திரன் ஆகியோரின் கரங்களால் விருது பெறுகிறார் சங்கத்தின் சிவகங்கை மாவட்டத் தலைவர் வேல் பொன்முடி அவர்கள்.

சிறுகதை

# நல்ல நாச்சியாள்

தரா கார்த்திகை
இலண்டன்



மரணம் விரட்டி, விரட்டி கொன்று போட்டது. பிணங்களின் குவியலுக்கப்பால் புணர்ந்து எழும் காற்று அந்த மண்ணைத் தின்று போட்டது. அச்சம் நிறைந்த தெருக்களில் பறைசாற்றும் கொடிய இராணுவ அணிகளின் இரும்புக் காலணி ஒலிகளைத் தவிர ஏதும் இரா. அந்த ஒலிகளுக் கப்பால் நிகழும் மரணங்களைத் தவிர ஏதும் நிகழா.

இரக்கம் இல்லாத சுடுபொறியை எவன், ஏன் கண்டு பிடித்தான். மனிதர்களுக்காகவா அது? அவர்களைக் கொல்வதற் காகவா அது? அந்தக் கொடுமை மிக்க சத்தத்திற்கு அப்பால் விழும் ஒரு தொகுதி மனிதர்களின் உடலங்கள், அவலம், அழுகை, வலி முனகல், வழியும் இரத்தம், பிரிவு, துயரம், ஒரு பெண் குழந்தையின் தனிமை, தாயைப் பிரிந்த தவிப்பு, ஏக்கம், ஏக்கம் நிறைந்த பார்வை, பரந்து கிடந்த பிணங்களின் ஊடே எங்கே என் தாய் அதுவா, அங்கேயா, சோகம், சொர்க்கமாகக் கிடக்கும் மண்ணில் சோளம், இறுங்கு, சாமை, கோதுமை என்று பூர்த்து புனிதமாக எழும் காற்று எல்லாவற்றையும் கடந்து நரகமாக பிணங்கள், மனித தசைப் பிண்டங்கள்.

அதற்கு அப்பாலும் கைகளை தலைக்கு மேலே உயர்த்திப் பயந்த விழிகளோடு மரணத்தை நெருங்கியவனாக காயங்களோடு சரணடையும் ஒருவனை மனித நேயம் கடந்து கைவிலங்கிட்டபடி உதைத்துத் தள்ளி கோழைத்தனமாக அவனது தலையில் மிக அருகில் வைத்து சுட்டு, சிதறிப் போகும் தலை துண்டங்களும் அதற்கு அப்பால் அவன் தனது சொந்த மண்ணில் சரிந்து விழும் பரிதாப நிலையும் அதன் அருகே நீண்டு, நிதானமாக ஓடும் தெளிந்த அருவியும் இனிய தெரியாத பறவையின் பாடலும் யாராலும் தடுக்க முடியாமலும் கொடிய மரணங்கள் நடுவே ஈரமாய் மெதுமெதுவாய் படர்ந்து கொண்டே இருந்தது.

புகை மண்டலங்கள் நடுவே நாசியை அரிக்கும் நாசிச நச்சுப் புகையின் ஊடே தீப்பிழம்பு, தீயைக் கடந்து எழுந்து போராடி நீளும் நல்ல காற்று, வலி, சுமை, மரணவேதனை யாவும் யாவும் கடந்து வியட்நாம் என்கின்ற மண்ணை மண்டை ஓடுகள் நடுவே அமெரிக்காவையும் ரஷ்யாவையும் காலில் போட்டு மிதித்து, விடியல் என்கிற பாடல் காற்றில் எழவில்லையா? அந்தப் பாடல வலிகளைக் கடந்து சோளம் அதன் நீண்ட இலையைத் தழுவி மெதுவாய் எழுந்து வரவில்லையா?

மண்டை ஓடுகள் மரணம் மனித முண்டங்கள் தனித்துப் போன ஒரு கை, எரிந்து எரிந்து முடியாத ஒருகால், விழி மூடாமல் கிடக்கும் ஒரு பிணம், அதற்கு அப்பால் வியட்நாம் அந்த மண்

அதன் விடியல் வாசல்களை அலங்கரிக்கும் இனிய காற்று எவ்வளவு சுகம் அந்த மண்ணின் மக்களுக்கு. சோளக்காட்டை கடந்துவரும் சுதந்திரக்காற்று எவ்வளவு இதம். எருக்களின் வாசனை எவ்வளவு சுகம்.

எல்லாம் கடந்து இரக்கமில்லாத மனித மிருகங்களின் எண்ணங்களின் கீழ்த்தரமான பார்வை அலங்கோலங்களில் அவலம், விமானங்கள் வீழ்த்தும் குண்டு வெடித்துச் சிதறும் இரும்புக் குண்டுகள் கொன்று போடவா இவை? கீறிப் பிளந்து தசைத்துண்டங்களாய் மனிதரைக் கொய்து போடவா இவை?.

கொடுமை கொடுமையிலும் கொடுமை! சுடுபொறி அதன் முனை முன்னால் வைரம் நிறைந்த கொடிய கத்தி. அதற்கு "வைனட்" என்று பெயர். குத்திக் கிழித்த மனிதனைக் கூறுபோட அது மனிதரில் மனித மிருகங்களின் இராணுவ காலணி ஒலிகளில் அருவெறுப்பு எல்லாம் எல்லாமே மனிதருக்காகவா இவை.

வலியில் எழுந்து நிமிர்ந்தாள் நல்ல நாச்சியாள். இயல், இசை, நாடகம் எல்லாம் இசைத்த என் நிலம், வணங்கா நிலம், வாழ்வை அள்ளி, அள்ளி வழங்கிய வாழ்வு மிக்க நிலம், வன்னி நிலம். வந்தோரை வாழ வைத்த நிலம். பெருமூச்செறிந்தாள் நல்லநாச்சியாள். அண்ணன் பண்டார வன்னியன் பறைசாற்றிய நிலம் அல்லவா வன்னி நிலம். வாய்க்கால்களில் நீர் ஓடி அந்த வழியெல்லாம் புல் நிமிர்ந்து நெற்கதிர் நிமிர்ந்து நெல்மணிகள் சுமந்து அறுவடையாகி தண்ணீரும் சோறும் தந்த நிலம் அல்லவா வன்னி நலம்.

வணங்காத சோழ மன்னன் அனுப்பி வைத்த குலமல்லவா வன்னியர் குலம். வாள் கொடியோடு புறப்பட்டு வெள்ளையன் பீரங்கிகளை பறித் தெடுத்து தமிழை நிலைநாட்டிய குலசேகரம் வைரமுத்து பண்டார வன்னியன் பலம் அல்லவா வன்னி நிலம்.

முல்லைத்தீவு, ஒட்டுச்சுட்டான், கற்சிசைமடு எல்லாம் எல்லாமே அண்ணன் பண்டார வன்னியன் உலவிய மண்ணல்லவா! வன்னி நிலம் வயலையும் குளங்களையும் குடிகளையும் இனத்தையும் மொழியையும் நெஞ்சில் சுமந்தவன் அல்லவா என் அண்ணன். படைகளைத் திரட்டி மன்னார், திருகோணமலை, திருமுருகண்டி எல்லாமே திரிந்து தமிழர் நிலங்களை கடலின் வளங்களைக் காத்தவன் அல்லவா என் அண்ணன். ஆசையோடு அவன் வாழ்ந்த நிலம் அல்லவா இந்த நிலம். சோளம், இறுங்கு, சாமை, நெல்லும் வனப்போடு வாழ்ந்த நிலமல்லவா வன்னி நிலம்.

நல்ல நாச்சியாள் அழலானாள். எனது நிலம், என் அண்ணன் இருந்த நிலம், அவன் ஆனந்தமாய்ப் படுத்து உறங்கிய நிலம் எனக்கு வேண்டும். காற்றும் மழையும் தந்த நிலம் எனக்கு வேண்டும். நாற்றும் நதியும் குயிலும் குலாவிய நிலம் எனக்கு வேண்டும். நான் என்னை மறந்து பாடித்திரிந்த நிலம் எனக்கு வேண்டும்.

அண்ணன் பெரிய மெய்யனார் பெருமையோடு படை நடத்திய நிலம் எனக்கு வேண்டும். என் அன்பு அண்ணன் கயல் வன்னியன் காதலித்த நிலம் எனக்கு வேண்டும். நல்ல நாச்சியார் படுக்கையை விட்டு எழுந்து வந்தாள், பார்த்தாள், நீண்ட வாளைப் பார்த்தாள். நீளும் இரவைப் பார்த்தாள். இரவே போய்விடு. என் தேசத்தின் மேல் கவிந்திருக்கும் இரவே போய்விடு. நாம் கூக்குரல் இட்டபோது என் அன்புப் பாட்டன் புலிக்கொடி யோடு ஊர்க்காவற்துறைக்கு வந்தான். தமிழ் நாட்டிலிருந்து என் சோழப் பாட்டன் வந்தான். வாள் கொண்டு வீசினான். வன்னியில் புலிக்கொடி பறந்தது. குதிரைகளின் குளம்பொலி பூபாளம் படித்தன. சிங்கம் ஓடி ஒளிந்தது. அப்படி நிகழும் இரவே அப்படி நிகழும் அதுவும் விரைவாய் நிகழும்.

"இரவே என் தேசத்திலிருந்து போய்விடு. என் கண்களிலிருந்து போய்விடு, இரண்டகர்களே போய்விடுங்கள் என் நிலத்திலிருந்து. என் எதிரி லிருந்து சென்று விடுங்கள். நல்ல நாச்சியாள் கத்தினாள், இரவின் கதவை ஓங்கி அவள் குரல் உடைத்துப் போட்டது. இரண்டகர் காதில் ஓங்கி அறைந்து அவன் வைத்திருந்த சுடுபொறியை அதிரச் செய்தது.

மறுபடியும் நல்ல நாச்சியாள் எதிர் ஒலிக்கும்படி அந்த இரவு நடுங்கும்படி சத்தமிட்டாள் "நடுநிசியே! நாங்கள் விதைத்து நெற்கதிர் தந்த நிலமே! நீள் விசும்பே! இந்த நிலம் எங்களது. எங்கள் அன்புப் பாட்டன் இலங்கேசுவரன் ஆண்ட நிலம், எங்கள் நிலம் எனக்கு வேண்டும்.

இரண்டகர்களே இங்கிருந்து போய் விடுங்கள். என் குரல் ஓங்கி ஒலிக்கும். உன்னை ஓங்கி அறையும். உன் செவியை ஊடறுக்கும். இங்கிருந்து போய்விடு. என் எதிரே நிற்காமல் போய்விடு. செங்கொடியும் என் தங்கை செங்கொடியும் முத்துக்குமார் என் தம்பி முத்துக்குமாரும் எரிந்த இடத்தில் என் குரல் என் அவலம் ஓங்கி ஒலிக்கும் என் அண்ணன்மார் வருவார்கள் இராமேசுவரத்திலிருந்த என் அண்ணன்மார் வருவார்கள்.

புலிக்கொடி சுமந்து வருவார்கள். கயவன் சுமந்திரனை காலில் போட்டு மிதிப்பார்கள். நெற்கதிர் சுமந்த என்நிலத்தை மீட்டுத் தருவார்கள். பல்லாயிரம் வீர மறவர்களைப் புதைத்த நிலத்தை மீட்டெடுப்பார்கள். பாட்டன் இலங்கேச்வர நிலமே ஏன் நீ உடைந்து பிரிந்து ஆழி குறுக்கறுக்க ஏன், ஏன் இராமேசுவரத்திலிருந்து பிரிந்து வந்தாய்? திரையே வளையுலவுந் திரையே ஏனம்மா எங்களைப் பிரித்துப் போட்டாய்?

பின்னிரவே பின்னிரவே, போய்விடு போய்விடு. உரத்த குரலில் கத்தினாள் நல்ல நாச்சியாள். தன் ஊரை ஆசையோடு பார்த்தாள். ஆசையோடு இருந்து அணைந்தாள், உதடு குவித்து முத்த மிட்டாள், தன் கைகொண்டு வருடினாள், வருடி யபடி கண்ணீர்விட்டாள். துயரம் தொண்டை முட்ட அழுதாள். நிலமே சென்று வருகிறேன். நான் மறுபடியும் வருவேன் என்று எண்ணாதே, எனக்காக காத்திருக்காதே நான் இலங்கேசுவரன் இராவ ணனின் குலசேகரம் வைரமுத்து பண்டார வன்னியனின் ஆசைத் தங்கை. கொள்ளுப்பாட்டன் சோழனின் கொள்ளுப்பேத்தி.

நிலமே, நிலமே நிம்மதியும் சோறும் தந்த நிலமே, சோர்வு நீக்கி உறக்கம் தந்த என் தாய் நிலமே! என்னைத் தேடாதே சென்று வருகிறேன், என்றபடி புறப்பட்டாள். இரண்டகர்கள் ஆக்கிரமித்த தன் நிலம் நோக்கிப் புறப்பட்டாள்.

“இரண்டகர்களே! சிங்களரே! வெளியேறுங்கள். என் நிலம் விட்டு அகன்று போய்விடுங்கள். உரத்த குரலில் கத்தினாள். நிலை குலைந்த ஒரு பறவை தூரத்தே கத்தியது. சிங்களரே வெளியேறுங்கள் எங்கள் நிலம் விட்டு வெளியேறுங்கள்“ நல்ல நாச்சியாள் நேர் எதிரே நின்று கத்தினாள். காவலில் இருந்த சிங்களன், கொடூரன், இரண்டகன், எழுந்து வந்தான். நல்ல நாச்சியாரை நோக்கினான், ஏளனம் செய்தான், இன்னும் ஒருவனும் கூட இருந்தான்.

வயது முதிர்ந்தவள் தளர்ந்த நடையோடு வந்து கொண்டே இருந்தாள். அச்சம் தொலைந்த பார்வையோடு கத்தினாள். “போய்விடு எங்கள் புலத்தைவிட்டுப் போய்விடு. எங்கள் நிலத்தில் உனக்கு என்ன வேலை? போய்விடு! இசைப்பிரியா என் அன்புச் சகோதரி இசைப்பிரியா இறந்து போன புலத்தில் உனக்கு என்னடா வேலை? உனக்கு என்னடா பார்வை? என்புலத்தில என்னடா பார்வை? போய்விடு! இரண்டகனே போய்விடு!“ நல்ல நாச்சியாள் கத்தினாள்.

இரண்டகன் கையில் கிடந்த பொறி பட படத்தது. மேலும் சடசடத்தது. இரக்கமில்லாத, இதயம் இல்லாத சுடுபொறு சடசடத்தது.

பக்கத்தே பெயர் தெரியாத ஒரு பறவை அதன் பாடல் காற்றில் மிதந்து கொண்டு இருந்தது. அருகே நீரோடை, தெளிவான சலசலப்புச் சத்தம் நீரோடை ஓடிக்கொண்டே இருந்தது. அவள் குரலைப் போல பாய்ந்து கொண்டே இருந்தது. நல்ல நாச்சியாள் அவளது குரல், அவளது பார்வை, அவளது ஏக்கம் எல்லாம் எழுந்து அந்தக் காற்றில் பரவத் தொடங்கிற்று. வியன்நாமில் நிகழ்ந்தது போல் வியட்நாம் உடைந்ததுபோல், பிரிந்து செல்லும் சுதந்திரக்காற்று ஓடைச்சத்தம் எல்லாமே, எல்லாமே எழும். இராமேசுவரம் அந்த அழகிய நிலம், அந்தக் குடியிருப்பு எங்கும், எங்கும் நல்லநாச்சியாள் குரல் அவள் அழைக்கும் வீரக் குரல் எல்லாம், எல்லாமே நீண்டு கொண்டே இருந்தது. ●


## முற்றம் இதழுக்கான விளம்பரக் கட்டணங்கள்

பின்னட்டை பல வண்ணம் ரூ. 10,000/-
பின் உள் அட்டை பல வண்ணம் ரூ. 7,000/-
கருப்பு வெள்ளை முழுபக்கம் ரூ. 5,000/-
கருப்பு வெள்ளை அரைப் பக்கம் ரூ. 2500/-
க. வெ. கால் பக்கம் ரூ. 1500/-

சந்தா விவரம்: தனி இதழ் ரூ. 10/-
ஆண்டு சந்தா ரூ. 120/-

# உண்மையைத் தேடி

முன்னால் பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி விவகாரத்தில் Hindu நிர்வாகத்திற்கும், அதன் இயக்குனர் என். ராமிற்கும் உள்ள பங்குகள் மிக முக்கியமானது எனலாம். Hindu பத்திரிகையில்தான் சிவராசன் போட்டோ முதல் முதலில் வெளிவந்தது. அந்த சிவராசன் போட்டோ C.B.I அதிகாரி கைக்கு செல்லும் முன்னே Hindu நாளிதழில் வெளியானது என்று ரகோத்தமன் தன் புத்தகத்தில் தெளிவாய்க் கூறுகிறார். ஆனால், அதைப் பற்றி விசாரணைக் குழுவிற்கும், விசாரணை அதிகாரிகளுக்கும் தெரிவிக்கவில்லை.

இவ்வாறு Hindu நிர்வாகம் தனக்கு தெரிந்த உண்மையை விசாரணை அதிகாரிக்கும், இந்திய அரசுக்கும் தெரிவிக்காமல் ஒத்துழையாமை செய்து மறைமுகமாக இந்தியாவை தாக்கிய எதிரிகளுக்கு உதவியுள்ளது. இது மாபெரும் குற்றம். இதை ஏன் அதிகாரிகள் விசாரிக்கவில்லை. இது அன்று நடந்தது. ஆனால் ராஜீவ்காந்தி கொலைக்குப்பின் தொழில் அதிபர் தன்னைத் தேடி வந்த சிவராசனுக்கு வீடு கொடுத்து இருந்தார். சிவராசன் ராஜீவ் கொலையாளி என தெரிந்தே வீடு கொடுத்து இருந்தார். இச்செய்தியை அரசுக்கும், விசாரணை அதிகாரிக்கும் தெரிவிக்காமல் விட்டது பெரும் குற்றம். இதனால் அவர் சதி செய்தார் என்று குற்றம் சாட்டப்பட்டு அவர் சிறையில் அடைக்கப்பட்டார். அவர் தமிழர் என்பதால். ஆனால் அதே தவற்றைத்தான் இந்து நிர்வாகம் செய்து இருக்கின்றது. ஆனால் அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் இல்லை. காரணம் அவர் ஆரியர் என்பதினால்தான் என்று நம்மால் உணர முடிகின்றது.

ஆனால் இன்று இந்து பத்திரிக்கையின் தலைமை ஆசிரியர் ராதாகிருஷ்ணன், குடிபெயர்ந்த இலங்கை தமிழர்களின் மறுவாழ்வு என கூறி, அவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்புதல் என்ற நோக்கத்தில் ஒரு கருத்தரங்கு நடத்தினார். அதற்கு ராஜீவ்காந்தி



...பி.ஐ. முற்றுகை

...ள் மறைந்து ...மாக பெங்க...ர்கள். 29.6.1991 ...ய்ச்சேர்ந்தனர். ...றவாக இருந்த ... மாத காலம் ...ளில் படாமல் ...திரிந்தனர்.

ஒற்றைக்கண் சிவராசன்

சிவராசனுக்கு இடது கண் கிடையாது. படத்தில் ஒற்றைக்கண்ணுடன் தோன்றுகிறான், சிவராசன்.

இடது பக்கம் செயற்கைக் கண் பொருத்திக்கொண்ட பின் சிவராசன் தோற்றம்.

...வராசன் யார்?

...ஜீவ் காந்தி படுகொலைக்கு ...ல்பட்ட குழுவிற்கு தலைமை ...கிய சிவராசனின் உண்மையான ...ர் பாக்கிய சந்திரன். யாழ் ...ணத்தில் உடிப்பபடியைச் ...தவர். இவரது தந்தை ஆங்கிய ...க்கல்வி பள்ளிக்கூடத்திற்கு ...ரியராக இருந்தவர். இவரின் ...ாதரர் பெயர் ரவிச்சந்திரன். ...ர் புலிகள் இயக்க மாணவர் ...ல் செயல்பட்டுக் கொண்டு ...ந்தவர். ரவிச்சந்திரனின் ...றாரு பெயர் தில்லை அம்பலம் ...திர ராஜா.

...ந்திய அமைதிப்படை ...ங்கையில் இருந்த போது ...களால் இந்த ராஜா படிபட்டு ...க்குச் சென்றவர். சிவராசன் ...ங்கையின் மின்வாரியத்தில் ...க்களப்பல் பணிபுரிந்த அரசு ...யர். முதலில் தான் ஈடுபட்டு ... டெலோ இயக்கத்தில் இருந்து ...கி விடுதலைப்புலிகளின் ...கத்திற்கு வந்தவர். தொடக்கத் ... இந்தியா போராளிக் குழுக் ...கு ஆயுதப்பயிற்சி வழங்கிய ...து அதில் பயிற்சி எடுத்தவர் ... இவரும் ஒருவர்.

... இலங்கை ராணுவத் ...டன் (1987) போரிட்ட போது ... ஒரு கண்ணை இழந்து ...ளில் ஒற்றைக்கண் சிவராசன் ...ம் பாக்கியசந்திரனின் சுருக்க ... பாகி அண்ணா என்று ...த்தில் அழைக்கப்பட்டவர். ...வு பக்கங்களில் சிவராசன் ...வரன் என்ற பெயரைப் ... தொடக்கத்தில் விடு ...புலிகளின் இராணுவ ...ற்று பன்னாளில் ...ான் தலைமையில் ...ரிவுக்கு தேர்ந் ... இந்திய ...மயாக

படை விலகி இந்தியாவிற்கு திரும்பத் தொடங்கிய 1990 பப்ரவரி மாதத்தில் சிவராசன் வழிகாட்டலின்படி சுதந்திர ராஜா குருவி பயணத்தின் மூலம் சென்னை வந்து கோடம்பாக்கத்தில் உள்ள தொழிற் நுட்ப கல்லூரியில் சேர்ந்தார்.

இந்தக் கல்லூரியும் இலங்கைத் தமிழரால் நடத்தப் பட்டுக் கொண்டு ருந்தது. அருகே உள்ள ஒரு குடியிருப்பு வளாகத்தில் இருந்தவர் பத்பநாபா தலைமையில் இருந்த ஈபஆர்எல்எப் அலுவலகம் இயங்கிக் கொண்டுருந்தது.

தற்கொலை செய்து கொண்ட சிவராசன் பிணமாகக் கிடந்தபோது எடுத்த படம். சிவராசன் நெற்றியில் குண்டு பாய்ந்து, ரத்தம் வடிவதைக் காணலாம்.

சயனைடு விஷம் தின்று தற்கொலை செய்து கொண்ட சுபா.

14 • இராஜாசிங்

கொலையின் முக்கிய ஆதார வீடியோவை மறைத்தவரும் ராஜீவ்காந்தி சென்னை வருகையின் தாமதத்தை சிவராசனுக்கு தொலைபேசி மூலமாக தெரிவித்தர் என்று சந்தேகத்திற்கு உரியவருமான நாராயணன் சிறப்பு விருந்தினராக அழைக்கப் பட்டார். இதில் இருந்து இந்து குழுமத்தின் பங்கு என்ன என்பதை நாம் மிக தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

மிக எளிதாக தமிழர்களின் உணாச்சியைத் தூண்டக்கூடிய வகையில் பேசக் கூடியவரும் உணர்ச்சி வசப்படக் கூடியவருமாகிய அண்ணன் வைகோ அவர்கள் எவ்வாறு எல்லாம் ஆரியர்களால் ஏமாற்றப்பட்டார் என்று நாம் பின்னோக்கி யோசிக்கும் போது சற்று மனம் கிலேசமாகவும் துக்கமாகவும் இருக்கின்றது. எப்படியெனில் சட்டமன்றத் தேர்தலில் ஒரு குறிப்பிட்ட கட்சியை சுட்டிக்காட்டி ஊழல்வாதிகளின் சொத்தைப் பிடிங்கி, அரசுடமையாக்குவோம் என்று கூறிவிட்டு பின் நாட்களில் பாராளுமன்றத் தேர்தலில் அந்தக் கட்சியுடன் கூட்டணி வைத்த நிகழ்வுகளும் உண்டு. இந்த நிகழ்வு அரசியல் என்று நாம் எடுத்துக் கொள்ளலாம்.

தமிழகத்தில் ஒரு முதுமொழி உண்டு. அதாவது ஒரு வார்த்தையானது ஒருவனை கொல்லும் அல்லது அவனை வாழவைக்கும் என்று.கடந்த முறை ஙி.யி.றி அரசை அண்ணன் வைகோவும், கலைஞர் மு.கருணாநிதி அவர்களும் இணைந்தே ஆதரித்தனர்.

அட்டல் பிகாரி வாஜ்பாய் 5 ஆண்டு ஆட்சியில் அமர்ந்து முடித்து விட்டு, ராஜீவ்காந்தியை கொன்றது தமிழர்கள் என்று கூறினார். இந்தப் பொய்யான வார்த்தையின் நிமித்தமாக பிற்காலத்தில் சுமார் 1.45 லட்சம் தமிழர்களை நாம் இழந்தோம். அன்று கலைஞர் கூறினார், வாஜ்பாய் மிகவும் நல்லவர் என்று எண்ணினேன் என்றார். அன்று முதல் இன்றுவரை அவர் ஙி.யி.றி.யுடன் கூட்டணியோ, உறவோ வைத்தது இல்லை. தன் மீதும், தன் கட்சியின் மீதும் புழுதிவாரி இரைத்தவர் களுடனும் துரோகம் செய்தவருடனும் நட்பு பாராட்டினார். ஆனால் தன் இனம் தமிழ் இனம் மீது அபாண்டமாக பழி சுமத்தியவருடன் இன்றுவரை கூட்டணியோ உறவோ வைக்கவில்லை. இதனால்தான் கலைஞரை பெருமையாக பார்க்கத் தோன்றுகின்றது.

ஆனால் அண்ணன் வைகோ மூவரின் தூக்கிற்கு எதிர்த்து நின்று தடுத்த பெருமைக்குரியவர், உன்னதமானவர். ஆனால் ராஜீவ்காந்தியை தமிழன் தான் கொன்றான் என்று கூறி இந்தியாவையும் உலகத்தையும் நம்ப வைத்து தமிழனை தீவிரவாதியாக சித்தரித்து, இதனால் இலங்கையில் சுமார் 1.45 இலட்சம் தமிழர்களின் சாவுக்கு காரணமான அந்த வார்த்தையை கூறிய வாஜ்பாய், அவர்களின் கட்சியான ஙி.யி.றி.யுடன் மீண்டும் அண்ணன் வைகோ கூட்டணி வைத்ததையும் அவரைப் பெருமையாகப் பேசுவதையும் தமிழர்களாகிய நாம் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்.

தன் மீது களங்கம், குற்றம் ஏதேனும் வராதபடி தன்னை தூய்மையானவராக பாது காக்கும் அண்ணன் வைகோ, தமிழர் மீதும், தமிழ் நாட்டின் மீதும் கொண்ட கொள்கையில் இருந்து மாறியது போல் தோன்றுகிறது. இந்த மாற்றம் தமிழருவி மணியன் போன்றோருடன் ஏற்பட்ட நட்பினால் ஏற்பட்ட மாற்றமா என சிந்திக்கத் தோன்றுகின்றது.

விசாரணை அதிகாரி ரகோத்தமன் தந்தி ஜி.ஷி க்கு அளித்த போட்டியில் அண்ணன் வைகோவை தீவிரவாதி என பேசிய செயலை மறுக்காமல் (நீதிமன்றம் சென்று நீதி கேட்காமல்) இருப்பது சற்று நம்மை சிந்திக்க வைக்கின்றது. அண்ணன் வைகோ அவர்கள் இதை நீதிமன்றத்திற்கு கொண்டு சென்று ரகோத்தமன் கூறிய வார்த்தைக்கு நீதி கேட்டு இருந்து இருப்பாரேயானால், இன்று அந்த 7 பேரும் விடுவிக்கப்படாத நிலையில் மாற்றம் ஏற்பட்டு விடுதலை பெற்று இருப்பர் என நான் எண்ணுகின்றேன்.

இந்திய அரசியல் சாசனச் சட்டம் பல குற்றவாளிகள் தப்பலாம். ஆனால் 1 நிரபராதி தண்டனை அடையக்கூடாது என்ற கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. ஆனால் இங்கு தமிழன் என்ற காரணத்திற்காகவே நிரபராதிகள் (சாந்தன், பேரறிவாளன்) தண்டிக்கப்பட்டு உள்ளனர்.

இது இந்தியாவில் தமிழனின் உரிமையை நசுக்கும் செயல். இவ்வாறு இந்தியாவில்

தமிழர்களின் உரிமையை நசுக்கும், அந்த மனித இனத்தை நாம் எவ்வாறு வென்றெழ வேண்டும் என்று சிந்தித்துச் செயல்படும் நேரம் இது. செயல்படாது போயின், தமிழன் தமிழகத்தில் அழிக்கப்படுவதற்கு நாமே காரணமாய் அமைவோம் என்பதை நாம் உணர வேண்டும். எப்படி எனில் அண்ணன் வைகோ தன் நிலைப்பாட்டை மாற்றி கொண்டதன் விளைவுதான்.

அண்ணன் பொன்னார் அவர்களின் வெற்றி அந்த வெற்றியின் களிப்பினால் கைவிடப்பட்ட மூவரின் தூக்கு தண்டனையை நிறைவேற்றும்படி மறு சீராய்வு மனுவை B.J.P அரசு உச்சநீதி மன்றத்தில் தொடுத்தது. அப்போது அண்ணன் வைகோ எததகைய போராட்டமும், ஆர்ப்பாட் டமும், கண்டன தீர்மானமும் B.J.P. அரசை கண்டித்து நடத்தவில்லை என்பது வருத்தத்துக்கு உரியது. ஜெயின் கமிசனை கிடப்பில் போட்டது வாஜ்பாய் அரசு என்பதை நாம் உணர வேண்டும். இதனால் கிடைக்க இருந்த நீதி மறுக்கப்பட்டது.

தமிழகத்தில் அனைத்து மகத்தினரும் ஒன்று கூடி தங்களது மகிழ்ச்சியைக் கொண்டாடும் விதமாக ஒரு பண்டிகை அமையுமானால், அது தான் பொங்கல் திருநாள், அந்த தமிழர் திருநாளை இந்து சகோதரர்கள் அவர்களின் முறைப்படியும், கிறிஸ்தவ, இஸ்லாமிய சகோதரர்கள் அவர்களது முறைப்படியும் கொண்டாடுகின்றனர். ஆனால் நாத்திகர்கள் மாத்திரம் இதைக் கொண்டாட வில்லை. இதை உணர்ந்த கலைஞர் உலகத்தில் உள்ள அனைத்துத் தமிழர்களும் கொண்டாட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு பொங்கல் திருநாளை தமிழர் புத்தாண்டாக அறிவித்தார். இதனால் தமிழ் உணர்வு அதிகரித்து ஒற்றுமை ஓங்கி வளரும் என்ற உயர்ந்த நோக்கோடு கலைஞர் இச்செயலைச் செய்தார்.

ஆனால் அதை உணர்ந்த ஆரியர் கூட்டம், இதைத் தடுத்து நிறுத்த கடும் நடவடிக்கை எடுத்தது, உச்சநீதிமன்றம் சென்று அங்கு தோற்கடிக்கப்பட்டனர். பின்னர் அதை சூழ்ச்சியினால் தடுத்து நிறுத்திவிட்டனர்.

அதேபோல் ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு போன்ற விளையாட்டுகள், இந்து ஆலயங்களில் வளர்க்கப்பட்ட காளைகளை முதலில் அவிழ்த்து விடுவது, கிறிஸ்தவ ஆலயங்களில் காளைகளுக்கு புனிதநீர் தெளிப்பது, தர்க்காக்களில் இருந்து காளைகளை அலங்கரிக்க, அவற்றின் மீது போடப்படும் துணிகள் கொண்டு வருவது. இவ்வாறு தமிழகத்தில் அனைவரும் ஒன்றிணைந்து ஒரே அணியாக நிற்பதைக் கண்ட ஆரியர்கள், நீதிமன்ற ஆணை என்று கூறி அதைத் தடுத்து விட்டனர். ஆனால் ஆந்திராவில் போலீஸ் பாதுகாப்புடன், அந்த விளையாட்டுகள் நடத்தப்பட்டன. இவ்வாறு ஆரியர்கள் தமிழகத்தில் திராவிடர்கள் ஒன்றிணை வதை எவ்வாறு தடுக்கலாம். எவ்வாறு பிரித்தாளுவது என்ற நிலைப்பாட்டில் முழு முயற்சியுடன் இருக்கின்றனர் என்பதை நாம் இதன் மூலம் உணர முடிகின்றது.

இந்தியாவின் கூட்டாட்சித் தத்துவத்தில் பெரும்பான்மை இனமக்களும் சிறுபான்மை மக்களும் சமம். அனைவரும் அனைத்து உரிமை களும் பெற்று வாழவேண்டும் என்பது தான் நியதி. இது திராவிட முன்னேற்றம் கழகத்தினரால் தான் கடைபிடிக்கப்படுகின்றது. (உ.ம்). நாம் சொல்ல வேண்டும் என்றால், கைபர், போலன் கணவாய் வழியாக இந்தியாவின் உள்ளே ஊடுருவி தமிழகத்தில் 3% விழுக்காடாக வாழ்ந்து வரும் சிறுபான்மை இனத்தவரான ஆரியர்களின் மதத் தலைவராக உள்ள மதிப்பிற்குரிய சங்கராச்சாரி யரின் மீது வெளிவர முடியாதவாறு குற்றம் சுமத்தி, அவர் சிறையில் அடைக்கப்பட்ட போது உச்சநீதிமன்றத்தில் அவர் விடுதலையாவதற்கு சாதகமான இலகுவான சூழலை உருவாக்கியது திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை சங்கராச் சாரியரும் சங்கரமடமும் மறுக்கவோ, மறைக்கவோ மாட்டார்கள்.

மேலும் காஞ்சிபுரம் இடைத் தேர்தலில், ஏழுபேர் கூட்டணி இல்லை. (சங்கராச் சாரியாருடன்) சேர்த்து எட்டு பேர் கூட்டணி என்று கூறிய வரலாற்றை நாம் மறைக்க முடியாது. இவ்வாறு சிறுபான்மையினரின் பாதுகாவலர் என அழைக்கப்படுபவர் கலைஞர்.

தமிழர் மீதும், தமிழ் நாட்டினர் மீதும் கொண்ட கொள்கையில் மாறாமல் தமிழர்களின் உரிமைக்கு முக்கியத்துவமும், தமிழ்நாட்டின் நலனுக்கு

பாதுகாப்புமான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமையும் போதுதான் தமிழன் ராஜீவ் காந்தியை கொலை செய்யவில்லை என நிரூபிக்கப்பட்டு, இப்போது கூறப்பட்ட குற்ற சாட்டுகள் தவறுதலானது என்று மெய்ப்பிக்கப் பட்டு, அவர்கள் விடுதலை அடைவதும், உண்மைக் குற்றவாளி சிறை செல்வதும், ராஜீவ்காந்தி கொலையில் தமிழன் குற்றவாளி இல்லை என இந்தியாவிற்கும், உலகத்திற்கும் நிரூபிக்கப்பட்டு, உலக அரங்கில் தமிழன் தலை நிமிர்ந்து வாழ்வ தற்கும், வருகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி வழிவகை வகுக்கும் என்பதில் எவ்வித அய் யப்பாடும் இல்லை.

தமிழர்களாகிய நாம் தமிழகத் திலும் நாம் ஆட்சி செய்த பூமியின் பல பாகங் களிலும் ஆட்சியை மீண்டும் பெற்று புகழோடு வாழ்வோம் என்பது மட்டும் நிச்சயம்.

குறிப்பு:

தமிழகத்தில் அரசியல் கொலைகள்/ அசம்பாவிதங்கள், மதக்கலவரம் மற்றும் தலைவர்கள் கொலை செய்வதற்கான சூழலை சிலர் (கட்சி பேதம் இன்றி) உருவாக்குவது போல் தெரிகிறது. ஆகவே மக்களும், கட்சித் தொண்டர் களும் விழிப்புடன் இருந்து, தமிழர்களாகிய நாம் அவற்றை முறியடிக்க வேண்டும். இல்லையென்றால், செய்யாத கொலைப் பழியால் சுமார் 1.45 லட்சம் தமிழர்களை இழந்தோம். மீண்டும் அது போன்று பழி நம்மீது சுமருமேயானால், நாம், சுமார் 10 லட்சம் தமிழர்களை இழக்க நேரிடும். ஆகவே தமிழர்களாகிய நாம் ஒருங்கிணைப்புடனும், கவனமாகவும் விழிப்புடனும் செயல்பட வேண்டிய தருணம் இது.

●

**சின்னத்திரை நடிகர்கள் சங்கத் தேர்தலில் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சவால்ராம்**



சின்னத்திரை நடிகர்கள் சங்கத் தேர்தலில் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சவால்ராம் அவர்கள் தான் வெற்றி பெற்றதற்கான சான்றிதழைக் காண்பித்த போது அவருக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்தி மகிழ்கிறார் கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத் தலைவர் திரு. இனிகோ இருதயராஜ் அவர்கள். உடன் இயக்கத்தின் துணைத்தலைவர் திரு. ஹேமில்ட்டன் அவர்கள்.



# உறவுகள் புத்தக வெளியீட்டு விழா!

31/01/2016 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி அளவில் சென்னை இராணி சீதை மன்றத்தில் கவிச்சக்கரவர்த்தி, கலைமாமணி வி. ஜி. சந்தோசம் அவர்கள் எழுதிய 'உறவுகள்' என்ற புத்தக வெளி யீட்டு விழா நடந்தது. விழாவிற்கு வந்திருந்தவர்கள் அனைவரையும் விழா நாயகனின் இளவல் திருமிகு. வி. ஜி. செல்வராஜ் அவர்கள் வரவேற்றார்.

தலைமையுரையை தஞ்சைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் ஔவை நடராஜன் அவர்கள் ஆற்றினார். எல்லோரையும் உறவாக்கிக் கொள்கிறவர் வி.ஜி. சந்தோசம். ஒருமுறை ரோமிற்கு குடும்பத்துடன் சென்றோம். அங்கே தெரிந்தவர்கள் யாரும் எங்களுக்கு அங்கே இல்லை. நாம் எங்கே போய் எப்படித் தங்கப் போகிறோம் என்று நான் கேட்டபோது அண்ணாச்சி சொன்னார், நமக்காக யாராவது இருப்பார்கள் என்று. ஐந்து பெண்கள் இருந்தார்கள் அவர்களைப் பார்த்து அண்ணாச்சி ஏதோ பொருளைக் கொடுத்தார். அவர்கள் திருச்சியைச் சேர்ந்தவர்கள் என்பதைத் தெரிந்து கொண்டோம். அவர்களது ஆதரவில் அன்று தங்கினோம். கொடுக்கும் போது உறவு வரும். கொடுத்து உறவைப் பெறுபவர் அண்ணாச்சி. அவர்களோடு இன்றும் நட்பில் இருக்கிறார். கொடுக்கும் போது உறவு வரும், எடுக்கும்போது பகை வரும். எனக்கு அறுவைச்சிகிச்சை நடந்த போது மருத்துவமனையிலே இருந்து எனது உடல் நலத்துக்காக வி.ஜி.செல்வராஜ் அவர்களும் வி.ஜி. சந்தோசம் அவர்களும் இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தனர் என்பதை அறிந்து நான் உருகிவிட்டேன்.

பிறரை நம்புவதால் வருவது உறவு. அப்படி பலரை நம்பி உறவைத் தேடிக் கொண்டவர் அண்ணாச்சி. நரிக்குறவர்களை நம்பி பொருளைக் கொடுத்தது என்பது புதிய வரலாறு. நம்பியவர்கள் ஏமாற்றினால் அந்த ஏமாற்றமும் ஒரு மகிழ்ச்சிதான் என்றார்.

அடுத்துப் பேசிய திரைப்பட இயக்குநர் பேரரசு அவர்கள், உழைப்பால் உயர்ந்தவர்கள் என்றால் வி.ஜி.பி தான். நான் இயக்குநர் இராமநாராய ணனிடம் உதவியாளராக பணியாற்றினேன். அப்போது ஒருநாள் விஜிபி யில் சூட்டிங் என்றார்கள். எல்லா உதவி இயக்குநர்களும் வேண்டாம் இரண்டு பேர் போதும் என்று சொல்லி என்னை விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். நான் பேருந்தைப் பிடித்து அங்கே போய்ச் சேர்ந்தேன். டிக்கெட் எடுத்து உள்ளே சென்றேன். நீ எப்படி வந்தாய் என்றார்கள். நான் பேருந்தில் வந்தேன். பேட்டா எல்லாம் வேண்டாம். நான் சூட்டிங்கில் வேலை செய்ய வேண்டும் என்றுதான் வந்தேன் என்றேன். அப்போது நினைத்தேன் நமது முதல் படத்தின் சூட்டிங்கை விஜிபி யில் தான் வைக்க வேண்டும் என்று. அது நிறைவேறியது. எனது முதல் படமான திருப்பாச்சியின் முதல்நாள் சூட்டிங் விஜிபி யில்தான் நடந்தது. அதையும் தாண்டி தற்போது எனது வீடும் விஜிபி க்கு எதிரில்தான் இருக்கிறது.

நான் ஓரளவிற்கு வெற்றி பெற்றுவிட்டேன் என்றுதான் நினைக்கிறேன். இந்தப் புத்தகத்தில் உறவுகளைப் பற்றி, பல உறவுகளைப் பற்றி எழுதியிருக்கிறார். அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டிய புத்தகம் என்றார்.

திருமதி தமிழிசை சௌந்தராஜன் அவர்கள் உறவுகள் புத்தகத்தை வெளியிட மாலைமுரசு நிர்வாக இயக்குநர் கண்ணன் ஆதித்தன் அவர்கள் பெற்றுக் கொண்டு, புத்தகத்தின் சிறப்பம்சங்கள் பற்றி பேசினார். 108 தலைப்புகளில் உறவுகள் பற்றிய தனது சிந்தனைகளை படரவிட்டிருக்கிறார் என்றார்.

அவருக்குப்பின் வாழ்த்திப் பேச வந்த ரோமோ இராஜன் அவர்கள் ஒரு திருக்குறளுடன் தொடங்கினார். ஒவ்வொரு பக்கத்தையும் சொல்லி அந்தப் பக்கத்தில் உள்ள மிக முக்கியமான கருத்தையும் கோடிட்டுக் காட்டினார். என்னை எப்போதுமே வி.ஜி. சந்தோசம் அவர்கள் மகன் என்றுதான் அழைப்பார். அது எனக்குக் கிடைத்த பாக்கியம். நான் நெல்லையில் ஒரு குக்கிராமத்தில் பிறந்தவன். எப்படியாவது விஜிபி தங்கக் கடற்கரையைப் பார்த்துவிட வேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருந்தவன். அந்தக் கனவு 1980 ஆம் ஆண்டு நிறைவேறியது. அதன் நிறுவனர் என்னை மகன் என்று உறவு கொண்டாடும் நிலைக்கு வந்திருக்கிறேன். இந்த உறவு நாங்கள் உயிருடன் இருக்கும்வரை இருக்கும் என்றார்.

தலைமை அமைச்சர் கோவை வருவதையொட்டி எனக்கு நிறைய பணிகள் இருந்தன. ஆனாலும் உறவுகள் என்ற தலைப்கைக் கேட்டவுடன் இந்த உறவை விட்டுவிடக்கூடாது என்பதால் இங்கே வந்தேன் என்று தொடங்கி தமிழிசை சௌந்தராஜன் பேசினார். மேலும் அவர் பேசியதாவது, அண்ணாச்சி என்று சொல்லும் போதே உறவு தொடங்கிவிட்டது என்றுதான் கூற வேண்டும். நான் மாணவியாக இருந்தபோது உலக அமைதிக் கோவிலில் வி.ஜி. சந்தோசம் அவர்கள் கரங்களால் பரிசு பெற்றிருக்கிறேன். அந்த நிகழ்ச்சியில் ஔவை நடராஜன் அவர்களும் கலந்து கொண்டார். அப்போது எனது தந்தை குமரி அனந்தன் அவர்கள் இங்கே குமரியும் கிழவியும் இருக்கிறார்கள் என்றார். என்னையும் ஔவை நடராஜன் அவர்களையும் கருத்தில் கொண்டு பேசினார்.

இந்த உலகம் தற்போது, பணம், பதவி, படிப்பு போன்றவற்றை விரும்பவில்லை. உறவைத் தேடித்தான் ஏங்குகிறது. நான் மருத்துவருக்குப் படித்திருந்தாலும் தமிழ் என்னைப் பெற்றதால்தான் நான் தமிழில் பேசுகிறேன். சிறு வயதில் தந்தையின் அருகாமையை இழந்தவள் நான். எனது தந்தை பேசுகிறபோது அவருடன் நானும் சிறுவயதில் செல்வேன். அப்போதெல்லாம் ஒரு பெரியவர் நிறைய சாக்லேட் கொண்டுவந்து தருவார். நான் அரசிய லுக்குள் வந்தபின் கடலூருக்கு கூட்டத் திற்குச் சென்றேன். அப்போது ஒரு பெரியவர் வந்து சாக்லேட் கவரைக் கொடுத்தார். ஒன்று எடுத்துக் கொண்டு அவரிடம் கொடுக்கலாம் என்று பார்த்தால் அவரைக் காணவில்லை. இப்படி பல தந்தைபோன்ற உறவுகளைப் பெற்றிருக்கிறேன்.

சென்னையை இக்கட்டுக்குள்ளாக்கின மழை வெள்ளத்தின்போது, நான் காரில் வந்து கொண்டிருந்தேன். அப்போது மணி 1 இருக்கும். சாலையில் ஒரு வயதான பெண்மணி நின்று கொண்டிருந்தார்கள். நான் வண்டியை நிறுத்தச் சொல்லி, நீங்கள் ஏந்த இந்த வேளையில் தனியாக நின்று கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு அந்த அம்மா சொன்ன பதில் என்னை நெகிழச் செய்து விட்டது. எம் என் சி நிறுவனங் களில் வேலைசெய்யும் பெண்பிள்ளைகள் வேலை முடிந்து இனிமேல்தான் வருவார்கள். அவர்கள் தினமும் என்னிடம்தான் இட்லி சாப்பிடு வார்கள்.

இன்று நான் கொடுக்காவிட்டால் அந்தப் பிள்ளைகள் பசியால் துடித்துப்போவார்களே என்றார். நான் அப்போது நினைத்தேன். இந்தப் பெண்மணி போன்றவர்கள் இருப்பதால்தான் உலகம் சுற்றிக் கொண்டிருக்கிறதென்று. உறவுகள் நமக்கு வேண்டும். இந்த உறவுகள் தொடர வேண்டும் என்று பேசினார்.

உழைப்பால் உயர்ந்த தாய்மொழிப் பற்றாளர் வி.ஜி.சந்தோசம் அவர்களின் ஏற்புரையில், நாங்கள் தொழிலும் செய்கிறோம், தொண்டும் செய்கிறோம். கொழும்பு அரசு 16 திருவள்ளுவர் சிலைகள் கேட்டிருக்கிறார்கள். ஜூன் மாதத்தில் சிலைகளை அனுப்ப இருக்கிறோம். 1993 இல் பாண்டிச்சேரி கம்பன் கழகம் உலகத் தமிழ்ச் சங்கத்தலைவராக என்னை ஏற்றுக் கொண்டனர். எனக்கு கவிதை எழுதத் தெரியாது. அங்கிருந்து வருகையில் நான் சொல்லச் சொல்ல அடைக்கலம் என்ற நண்பர் எழுதிக்கொண்டே வந்தார்.

கவிதை எழுதி என் மனைவியிடம் எப்படி இருக்கிறது என்று கேட்டபோது, உங்களுக்கெதற்கு இந்த வேலை என்றார்கள். இதுவரை ஒரு லட்சம் கவிதைகளை எழுதியிருக்கிறேன். இயேசுவின் அருட்காவியம் முதல் பல நூல்களை எழுதி விட்டேன். புத்தகங்கள் எழுதும்போது அம்மா விடம் கேட்பேன். அம்மா எனக்கு அருள் கொடுப்பார்கள். அதன் மூலம் எனக்கு உறவுகள் பெருகிக் கொண்டே இருக்கின்றன. ஆண்டவர் தாமே உங்கள் அனைவரையும் அபரிவிதமாக ஆசிர்வதிக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன் என்றார்.

பேராசிரியரும் முனைவருமான உலகநாயகி பழநி அவர்கள் தொகுத்தளித்தார். விழாவில் கவிக்கோ வா.மு.சேதுராமன் திரு. சா. கணேசன், உண்மையான கல்வியாளர் திரு அமுதா பாலகிருஷ்ணன், திரு. ஆர். பாண்டி உட்பட பல தமிழறிஞர்கள் கலந்து கொண்டனர். ●

# சி.ஏ தேர்வில் ஜேம்ஸ் ஜான் பிரிட்டோ இந்திய அளவில் முதல் இடம்



ஜனவரி 17ஆம் தேதி சி.ஏ தேர்வு முடிவுகள் வெளியானது. இந்தத் தேர்வு இந்திய அளவிலானது. இத்தேர்வில் சென்னையைச் சேர்ந்த ஜேம்ஸ் ஜான் பிரிட்டோ முதல் இடத்தைப் பெற்றுள்ளார். சார்ட்டர்டு அக்கவுண்டண்ட் என்று அழைக்கப்படும் சி.ஏ. தேர்வு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்றது. இந்தத் தேர்வை இந்தியா முழுவதிலும் இருந்து 42,469 பேர் எழுதினார்கள். அதில் 2,440 பேர் மட்டுமே தேர்ச்சி பெற்றிருக்கின்றனர். தேர்வில் அகில இந்திய அளவில் முதல் மாணவராக சென்னை பட்டதாரி வாலிபர் ஜேம்ஸ் ஜான் பிரிட்டோ வந்துள்ளார். அவர் 74.38 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றுள்ளார்.


ஜேம்ஸ் ஜான் பிரிட்டோ சென்னை முகப்பேர் 3வது தெருவைச் சேர்ந்தவர். அவர் சென்னை எழும்பூரில் உள்ள டான்போஸ்கோ மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் எல்.கே.ஜி. முதல் பிளஸ் 2 வரையில் படித்துள்ளார். பிறகு நுங்கம்பாக்கத்தில் உள்ள லயோலா கல்லூரியில் பி.காம் படித்துப் பட்டம் பெற்றார். இவர் சி.ஏ. தேர்வை முதல் முதலாக எழுதி வெற்றி பெற்று இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஜேம்ஸ் ஜான் பிரிட்டோ கூறுகையில், எனது தந்தை ராஜா சி.ஏ. தேர்வில் வெற்றி பெற்று ஆடிட்டராக இருக்கிறார். அவரைப் போல நானும் ஆடிட்டர் பணி செய்வேன் என்றார். இவரது தாயார் தேவி. அண்ணன் அருள் அவர்கள் மருத்துவராக பணிசெய்து வருகிறார்.

சிறுகதை

# கோதை நாயகியின் சீற்றம்

இருங்கோவேள்



நினைத்து நினைத்து சிரித்துக் கொண்டிருந் தான் கொடுமுடி. நண்பன் நந்தன் “என்னடா நீயே சிரிச்சுக்கிட்டு இருக்கிறே என்கிட்டயும் சொல்லு நானும் சிரிக்கிறேன்.“ “அது ஒன்னும் இல்லடா ஊருக்குப் போயிட்டு நேத்து இரவுதான் வந்தேன். வந்ததும் குளிச்சிட்டு சாப்பிட்டுவிட்டு தூங் கிட்டேன். இன்னிக்கு காலைல கடைக்குப் போனேன். அங்க, எங்க வீட்டுக்கு குடிதண்ணீர் கொடுக்கிற பையனும் அவனது முதலாளியும் என்கிட்ட வந்து ‘மன்னிச்சுக்குங்க அய்யா, சின்னப் பையன் ஏதோ தெரியாமப் பேசிட்டான். அம்மாக்கிட்ட இவன் மன்னிப்புக் கேட்டும் அவங்க இவன மன்னிக்கல. தண்ணியே வேண்டாம், நான் வேற ஆளுங்கக்கிட்ட வாங்கிக்கிறேன் நீ கொண்டு வர வேண்டாம்னு சொல்லிட்டாடங்க. நீங்க சொல்லுங்கய்யா அம்மாக்கிட்ட’ என்று கெஞ்சினார்.

அந்தப் பையன், உண்மையிலேயே வருந்துபவன் போல் காணப்பட்டான். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. என்ன சொல்றீங்க எதுவுமே புரியவில்லையே என்றேன். அந்த மனிதரோ அந்தப் பையனை நோக்கி சொல்லுடா என்று சொல்ல, ‘அய்யா நேத்து இரவு உங்க வீட்டுக்கு குடிதண்ணீர் கொண்டு வந்தேன். அப்போ நீங்க தூங்கிக் கொண்டிருந்தீங்க. நான் உங்களப் பாத்துட்டு அம்மாக்கிட்ட, “சார் மட்டையான்னு“ கேட்டேன். அவங்க ஒன்னும் சொல்லலை. நான் வெளியில வந்ததும் என்னோட அவங்களும் வெளியே சாலை வரைக்கும் வந்து, ‘இனிமே என் வீட்டுப்பக்கம் வந்துராதே. என் வீட்டுக்காரரை குடிகாரன்னு நெனச்சியா? இனி நீ தண்ணி கொண்டுவர வேண்டாம்’ என்று கூறி என்னைத் திட்டி அனுப்பி விட்டார்கள்’ என்றான். எனக்குச் சிரிப்பு வந்தது. நான் அடக்கிக் கொண்டு “அவங்கக்கிட்டச் சொல்றேன்“ என்று கூறிவிட்டு வந்தேன்.

வீட்டுக்கு வந்து ‘என்னம்மா தண்ணிக்காரனோட சண்டை போட்டியாமே, என்ன சிக்கல் என்று கேட்க, அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. ‘அந்தப் பயலுக்கு எவ்வளவு கொழுப்பு இருந்தா உங்களப் பாத்து சார் மட்டையான்னு கேப்பான். அதான் அவனத் திட்டி, இனிமே வராதேன்னு சொல்லி அனுப்பினேன்’ என்று

சொன்னாள் அதை நெனச்சுத்தான் சிரிச்சுக்கிட்டே இருக்கிறேன்“ என்று கொடுமுடி கூற நந்தனும் சேர்ந்து சிரித்தான். “டேய் மாப்ள வீட்டுக்குப் போகும்போது நானும் கூட வரேன்டா தங்கச் சிக்கிட்ட கொஞ்சம் பேசணும்டா” என்று நந்தன் கூற, “என்னடா பேசப்போறே“ என்ற கொடுமுடி யிடம் அதெல்லாம் அண்ணன் தங்கச்சி சங்கதி. உனக்கெல்லாம் சொல்லமுடியாது“ என்று கூற “சரி சரி நான் போகும்போது சொல்றேன்“ என்று கூறிவிட்டு வேலையைச் செய்யத் தொடங்கி விட்டான்.

வேலை முடிந்து “நந்தா நான் வீட்டுக்குக் கௌம்பீட்டேன்டா“ என்று கூற “இருடா மாப்ள இன்னும் 5 நிமிடத்தில வந்துறேன்“ என்று ஐந்து நிமிடத்தில் வந்தான். இருவரும் கொடுமுடியின் வீட்டுக்கு வந்தனர். “வாங்கண்ணே, வாங்கண்ணே“ என்று வாய் நிறைய மகிழ்ச்சி நிரப்பி வரவேற்றாள் கொடுமுடியின் மனைவி கோதைநாயகி. நந்தனை உட்காரச் சொல்லிவிட்டு குடிப்பதற்கு குளிர்ச்சி யான மோர் கொண்டு வந்து கொடுத்தார். “தங்கச்சி மோர் நல்லா இருக்கும்மா“ என்று கூறிய நந்தன், போன தேர்தல்ல யாருக்கும்மா வாக்களிச்சே“ என்று கேட்க, அவளோ “இப்போ ஆளுகிற கட்சிக்குத் தாண்ணே“ என்றாள்.

“சரிம்மா உனக்கு மது குடிக்கிறவங்கள பிடிக்குமாம்மா?“ “என்னண்ணே இப்படிக் கேக் குறீங்க, நீங்க குடிக்காத ஆளா இருக்கிறதாலதான் உங்களோ அவர பழக விட்டிருக்கேன். குடிகாரங் களோட என் கணவன் பழகுறதையே விரும்பாத எனக்கு அவங்கள எப்படிப் பிடிக்கும்?“ “அப்போ குடி உனக்கு பிடிக்காது அப்படித்தானே“ “என் னண்ணே கேள்வி இது? குடி இந்த உலகத்திலேயே இருக்கக்கூடாதுண்ணே அதுதான் எல்லோருக்கும் நல்லது“ என்றாள்.

நந்தனோ “டாஸ்மாக் மதுக்கடையை யாரும்மா நடத்துறாங்கம்மா“ என்று கேட்க, அரசாங்கந்தான் நடத்துதுண்ணே“ “நீ தானம்மா வாக்களிச்சே, அவங்க மதுக்கடையை நடத்துறாங்க, நீ அதுக்கு ஆதரவு கொடுத்ததாத்தானே அர்த்தம்.“ என்று நந்தன் சொல்ல கொடுமுடியின் துணைவி கோதை நாயகிக்கோ என்ன பதில் சொல்வது என்ன என்றே தெரியவில்லை.

“நமது வீட்டில் உள்ள ஆண்கள் குடிக்கக் கூடாது என்று நினைக்கிற நாம், நாட்டில் குடிக் கடையை நடத்துகிற அரசை தேர்ந்தெடுக்கலாமா? அவர்களுக்கு ஆதரவளிக்கலாமா?“ என்று மதுக்கடை நடத்துகிற ஆளுங்கட்சிக்கு எதிராக ஒரு விரிவான மேடைப்பேச்சையே பேசிவிட்டான் நந்தன். கோதைநாயகியின் சீற்றம் குடிதண்ணீர் கொடுக்கும் பையனை விட்டுத் தாவி ஆளும் அரசாங்கத்தின் மேல் அமர்ந்தது. அடுத்த முறை மதுக்கடையை எதிர்க்கும், மதுக்கடையை நடத்தாத அரசு அமைக்க முன்வருகிறவர்களுக்காக பரப்புரை மேற்கொண்டு தனது வாக்கையும் அவர்களுக்கே அளிக்க வேண்டும் என்று முடிவு செய்தாள். பெண்கள் நினைப்பது நடக்காமல் இருக்குமா என்ன?

●

## 2015-2016 அழகு போட்டி




பிரேலேடி வழங்கும் 2015-16 ஆம் வருடத்திற்கான மிஸ் மெட்ராஸ் மற்றும் மிஸஸ் சென்னை அழகுப்போட்டி 31.01.2016 ஞாயிறு மாலை 3 மணியளவில் வேளச்சேரியில் உள்ள கிராண்ட் மாலில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் நடிகர் விஜய் ஆதிராஜ், நடிகை பாத்திமா பாபு சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை பூர்ணிமா குமார் சிறப்புற நடத்தினார்கள். இந்நிகழ்ச்சிக்கு கோ-ஸ்பான்சர்கள் ஸ்டைல் ஒன் மற்றும் ஜெ.ஜெ.டைமண்ட்ஸ்

to live is to love

ARUWE

Enriching the Lives of Urban Poor

Cordially invites you & your family for

# Aruwe Chillout 2016

*A Dance & Musical Nite*

**Programme**

| | | |
|---|---|---|
| 6.00 P.M. | : | Prayer song by ARUWE CHILDREN |
| 6.05 P.M. | : | Lighting the Kuthuvelakku |
| 6.15 P.M. | : | Welcome Speech |
| 6.20 P.M. | : | **Honouring** Guests and Patrons |
| 6.30 P.M. | : | |

**Special Performance**
G Mime Studio
MAI School of Dance
De Dance Den
Cue Entertainment
Corporate Groups

**Social Visionary Award ceremony**

Compered by : **RJ Gopida & VJ Archana**

Sunday 14th February, 2016 at 6.00 p.m.
Kamaraj Memorial Hall, Teynampet, Chennai

*Awaiting your esteemed presence on this special occasion!*

**ARUWE**

(Reg. No. 777/2000)

# 11, Solaiamman Koil Street, Ayanavaram, Ch-23, Ph. : +91- 44 2645 4615 / 98412 33115
Email : info@aruwe.org /aruwe@rediffmail.com Web : www.aruwe.org

# ஏ! தொப்புள்கொடி தமிழினமே!
# இன்னமும் நீ விழிப்படையாதது ஏன்?

### தமிழ்நேயன் இசைக்கும்மணி.

"தம்மைத்தாமே ஆட்சி புரிந்திடும்
அரசியல் சுதந்திர கோரிக்கை வைத்திடும்
தமிழ் ஈழத்தின் உரிமைக்குரலை
சர்வதேச சமூக அசட்டை செய்திட முடியாது!

தமது அரசியல் தகைமையை
தாமாகவே நிர்ணயித்துக் கொள்ளவே
எமது மக்கள் விரும்புகின்றனர்!

ஒரு தேசிய மக்கள் சமுதாயம் என்ற ரீதியில்
தமது அரசியல் வேட்கையினை
சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும்
என்பதே எமது மக்களின் அறைகூவலாகும்!"

"இந்த திமிழீழ விடுதலைக்கான
மூன்று தசாப்த போரில் முப்பதினாயிரம்
தமிழின மாவீரர்கள் களமாடி வீழ்ந்திட்டனர்!

இந்தபெரும்திரள் போராளிகளைவிட
பலமடங்கு பொதுமக்களும்
எதிரிகளால் கொன்றழிக்கப்பட்டுள்ளனர்!

சுயநல இன்பங்களைத் துறந்து
பொதுநல இலட்சியத்துக்காகப் போராடி
சாவைத்தழுவிய எமது உத்தமர்களை
நினைவுகூறும் புனிதநாளே, மாவீரர் நாள்!"

மாவீரர் தின நினைவேந்தல்களில் எல்லாம்
தங்களின் நிலைபாட்டை எடுத்துரைத்திட்டவர்
தமிழீழ தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன்

இவ்வாறான தமிழீழ விடுதலைப்போரை
வழிநடத்திட்ட முன்னோடி தளகர்த்தர்கள்
கிட்டு, தமிழ்ச்செல்வன், பாலசிங்கம்
சீவரத்தினம் உள்ளிட்ட தளபதிகளும்
இம்மாவீரர் நினைவுப் பட்டியலில்
இடம்பெற வேண்டியவர்களாகிப் போனஇலங்கை
தமிழ்மக்கள் வரலாற்றின்
இருண்ட பக்கங்களாகி விட்டனவே!

இன்று நேற்றல்ல பலலட்சம் ஆண்டுகளுக்கு
முன்னரே
பழங்கால மனிதஇனம்
நம்பிக்கைத் துரோகங்களால் அழிந்தொழிந்ததும்
நாடு, மலை, காடு, ஆறு கடந்ததும்
வரலாற்று பதிவுகளால் தெரியவந்திருக்கிறது.
ஈழத் தமிழின அழித்தொழிப்பும்
ஏதிலியர்களாகி அவர்கள் அலைக்கழிக்கப்பட்டதும்
உலக தமிழினத்திற்கு ஏற்பட்ட இழிநிலை ஆனதே!

"ஆயுத வன்முறையில் நாட்டமுள்ள
போர்வெறியர்கள் அல்ல,
யாம் சமாதான மென்முறையிலும்
பற்றுறுதி கொண்டவர்கள்" என உணர்த்தி
பெருந்தன்மையுடன் சர்வதேச சமூகத்தின்
அறிவுரையை செவிமடுத்து,
ஆயுதங்களைக் களைந்து, நிராயுதபாணியாய்,
முள்ளிவாய்க்கால் போர்க்களத்தில் அணிவகுத்து
வெள்ளைக்கொடி ஏந்தி முன் நடந்திட்டனரே!

அமெரிக்க பிரிட்டீஷ் அரசுகளின்
உறுதியில்லாத உத்திரவாதமும்
மகிந்த ராஜபக்சேவின் நயவஞ்சக உறுதிமொழி,
ஐ.நா பொதுச்சபையின் 'விஜயநம்பியார்'
சிங்கள இராணுவத்தின் தம்பி சதீஷ்நம்பியார்'
இலங்கை நாடாளுமன்றத்தின் 'ரோகன் சந்திரநேரு'
உள்ளிட்டோரின் துரோகங்களால்
பாலசிங்கம் நடேசனை, சீவரத்தின புலித்தேவனை
முன்னூறுக்கும் மேற்பட்ட பெண்கள் குழந்தைகளை
பல் ஆயிரக்கணக்கான குடும்ப உறவுகளை
துவக்குகள் குண்டுதுளைத்தி ஒட்டுமொத்தமாகி
சிங்களக் காடையர்கள் கொன்று குவித்துவிட்டனரே!

ஆயிரத்து ஐநூறு கி.மீ பரப்புள்ள தமிழீழத்தின்
ஐந்துலட்சம் மக்களில் ஒன்றரைலட்சம் பேரை
நிர்மூலமாக்கி சிதறுண்டு போக வைத்தனரே!

நியாயமான சுயநிர்ணய
அரசியல் உரிமைப் போராட்டத்தை,
தாயாகி தன்னாட்சிக்கான
தேச சுதந்திர எழுச்சியை,
பயங்கரவாதமென திரிபுபடுத்தி
அரசுபயங்கரவாத அராஜகத்தை
கட்டவிழ்த்துவிட்டு சீரழித்திட்டனரே!


2009இல் நடந்தேறிய இந்த தமிழின அழித்தொழிப்பு
உலகவரலாற்றில் யூதர்களின் படுகொலைக்குப்பின்
நிகழ்ந்திட்ட மிகப்பெரும் இனப்படுகொலை ஆனதே!

இலங்கை போர்ப்படையினரின் இத்தகைய
போர்க்குற்ற நடவடிக்கைகளுக்காக
சிங்களவர் அரசை குற்றவாளியாக்கி,
ஐ.நா பொதுமன்றத் தீர்ப்பின்படி தண்டித்திடாமல்
இலங்கை அரசின் தன்னிச்சையான விசாரணையே
போதுமென்கின்ற ஏகாதிபத்திய நாடுகளின்
மத்தியஸ்த நிலைப்பாடு ஈனச்செயலன்றோ!

உலகப் பிரச்சனையில் ஆதிக்க நாடுகளின்
தலையீட்டுக்கு எதிராக அஞ்சாமல் எழுப்பப்பட்ட
அனைத்து நாடுகளின் குரல்களும்
அடங்கிப்போயினவே!

நோர்வே, ஸ்வீடன, இங்கிலாந்து, இத்தாலி, பிரான்ஸ்
உள்ளிட்ட நாடுகளின் புகலிடத் தமிழர்கள் அனைவரும்
"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்!" என
எந்நாளும் ஓங்கி ஒலித்து
சூளுரைத்து ஒளிகூட்டி எழுச்சி கொள்ளும்போது,
வயிற்றுக்குள் தலைபுதைத்து கண்மூடிக்கிடக்கும்
ஏ! தொப்புள்கொடி தமிழினமே!
இன்னமும் நீ விழிப்படையாதது ஏன்?


DTSF
டென்மார்க் தமிழர்
விளையாட்டுத்துறை
நான்காவதுதடவையாக
நடாத்தும்
தேசத்தின் குரல்
அன்ரன் பாலசிங்கம்
அவர்களின் ஞாபகார்த்த
கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி
05-03-2016
Kl 10
Lundhallen
Skolevej 7, 8700 Horsens
Tilmelding senest D.20/02/16
Kontakt 60471159




தமிழ் மையம், நாம் அமைப்பு, தமிழர் தொழில் வர்த்தக விவசாயப் பெருமன்றத் தினரும் இணைந்து இந்த ஆண்டு சங்கம் 4 இலக்கிய விழாவை இராஜா அண்ணா மலைபுரத்தில் உள்ள முத்தமிழ் மன்றத்தில் திருவாவடுதுறை இராஜரெத்தினம் பிள்ளை அரங்கில் நடத்தினர்.

இயற்கையுடன் மல்லுக் கட்டும் வளர்ச்சி நிலைக்குமா? சென்னைப் பெருவெள்ளப் பாடங்களும் எதிர்காலப் பாது காப்புத் தேடல்களும் என்ற தலைப்பை மையப்படுத்தி உரைகள் நடந்தன. கடந்த மூன்றாம் தேதி தொடங்கி ஏழாம் தேதிவரை இந்நிகழ்வு தொடர்ந்து நடந்தது.

முதல்நாளில் சென்னை கடலூர் பெருவெள்ளப் பேரிட ரால் உயிரிழந்தோருக்கும், கடந்த ஆண்டு சங்கம் 4 காலத்திற்குப் பின் இவ்வுலகை விட்டு அகன்ற மனிதருள் மாணிக்கம் டாக்டர் அப்துல்கலாம், இலக்கியப் பேராளுமை ஜெயகாந்தன், மெல்லிசை மன்னர் எம். எஸ். விஸ்வநாதன், தமிழ்ப்போராளி ஐயா அரணமுறுவல், தமிழ்ச்சமூக வரலாற்றறிஞர் மொபுரு கரசிமா, மூன்று தலைமுறை கலை வரலாறு கண்ட ஆச்சி மனோரமா, தமிழ் கணிப்பொறி யில் விற்பன்னர் சிறிநிவாசன், அறிஞர் பெருந்தகை தமிழண் ணல், நாட்டுப்புறவி யலாளர் கே. ஏ. குணசேகரன் ஆகியோருக்கும் அக வணக்கம் செலுத்தப்பட்டது.

அதன்பிறகு அடையாறு அழைத்துச் சென்ற தமிழ்க் கணிப்பொறியியல் அறிஞர் சிறிநிவாசன் பற்றி திருச்சுடர்

நம்பி அவர்களும் தமிழ்ப் போராளி ஐயா அரணமுறுவல் பற்றி முதன்மொழி பொறுப் பாசிரியர் இறையெழிலன் அவர்களும் மெல்லிசை “தென்றல் வந்தத காணீர்“ எம். எஸ். வி. நினைவுகள் பற்றி அவருடன் பலகாலம் பணிபுரிந்த பாடகர் அனந்து அவர்களும் தமிழுக்குப் பேரறம் செய்த பெருந்தகை தமிழண்ணல் அவர்களைப் பற்றி பேராசிரியர் தமிழறிஞர் வளனரசு அவர்களும் ஆச்சி மனோரமா பற்றி கவிஞர் ஜெயபாஸ்கரன் அவர்களும் பேசினர்.

வடிவெனப்படுவது இசைபட அமைதல் என்ற தலைப்பில் அறம் முருகேசன் அவர்கள் உரையாற்றி னார். அவர் தனது உரையில் சில காலம் வாழ்ந்த சிங்கப்பூர் பற்றிப் பேசினார்.

சிங்கப்பூர் 714 கிமீ பரப்பளவு உள்ள நாடு. மக்கள் தொகை 5.3 மில்லியன், மழை அளவு ஆண்டுக்கு 2400 மி.மீ. அங்கே வெள்ளம் 30 நிமிடம்தான் நிற்கும். வெள்ளத்தால் 1970 ஆம் ஆண்டு 3500 ஹெக்டேர் பாதிக்கப்பட்டது, 2015 ஆம் ஆண்டு வெறும் 34 ஹெக்டேர் நிலம் மட்டுமே பாதிப்புக்கு உள்ளானது. இதற்கெல்லாம் காரணம் லீ குவாங்க அவர்கள்தான். எந்தப் பாலிசியும் தண்ணீரை வைத்துதான் எடுக்கப்பட வேண்டும். மற்றதெல்லாம் அதன்முன் மண்டியிட வேண்டும் என்ற கொள் கையில்தான் அங்கே திட்டங்கள் தீட்டப்பட்டன. சிங்கப்பூருக்கு தண்ணீர் தந்துகொண்டிருந்த மலேசியா சிங்கப்பூரை மிரட்ட, சிங்கப்பூர் தண்ணீர் மேலாண்மையை கையிலெடுத்து தற்போது தண்ணீர் மிகை நாடாக இருந்து கொண்டிருக் கிறது என்றார்.

இதே தலைப்பில் வடிவமைப்பு நிபுணர் சத்யா அவர்கள் பேசினார். எனது தாயை மருத்துவ மனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்த்துவிட்டு வந்திருக்கிறேன் என்ற பீடிகையுடன் ஆரம்பித்தார். பூமித் தாயின் இன்றைய நிலைபற்றி மிகத் தெளிவாகப் பேசினார். நல்ல கொழுப்பு, கெட்ட கொழுப்பு நமது உடலில் மட்டுமல்ல, பூமியிலும் இருக்கிறது. மண்ணில் இருந்து வந்த கழிவுகள் நல்லவை. நாம் உருவாக்குகிற நெகிழி, இரசாய ணங்கள் போன்றவை கெட்டவை. கடைக்குப் போகும்போது துணிப்பைகளை கொண்டு சென்று அதில் பொருட்களை வாங்கிவர வேண்டும். நெகிழிப் பைகளை பயன்படுத்தக்கூடாது. கார் ஷெட்டிலாவது கான்கிரீட் போடாதிருங்கள். பூமி மூச்சுவிட இடம் கொடுங்கள் என்று பூமித்தாய்க் காக பரிந்து பேசினார். இயற்கை ஒலி ஒளிகளுடன் வாழ வேண்டும் என்று கூறிய அவர் ஒரு ஒலி ஒளிப்படத்தையும் தயார் செய்து திரையிட்டுக் காட்டினார்.



நிறைவு நாளில் ஓசை காளிதாஸ் அவர்களும் சூழலிய லாளர் ரேவதி அவர்களும் பேசினார்கள். இருவாச்சிப் பறவை என்ற ஒரு பறவை இருந்தது. அந்தப் பறவைகளில் பெண்பறவை முட்டையிடும் வேளை வந்தவுடம் ஒரு மரத்தைக் கொத்தி பொந்து ஏற்படுத்திக் கொண்டு உள்ளே உட்கார்ந்து விடுமாம். ஆண் பறவை தனது அலகு போகும் அளவிற்கு வழியை வைத்துக் கொண்டு அந்த பொந்தை அடைத்துவிடுமாம்.

பெண் பறவை தனது இறகுகள் எல்லாவற் றையும் உதிர்த்துவிட்டு, அதன்மேலே முட்டை யிட்டு குஞ்சு பொரித்து, அந்தக் குஞ்சுகள் பறக்கும் தருவாய்க்கு வரும்போது வெளிவருமாம். அதுவரை ஆண் பறவை தனது இணைக்கும் குஞ்சுகளுக்கும் அந்த சிறு துளை வழியே உணவுகளைக் கொடுத்து வரும். அப்படிப்பட்ட இருவாச் சிப் பறவையை காண முடிய வில்லை. மனதர்கள் தங்களது அமைதிக்காக காட்டில் வாழும் விலங்குகளையும் பறவைகளையும் நிம்மதியிழக்கச் செய்ததுமல்லாமல் அழியச் செய்து விட்டனர் என்று ஆற்றாமையை வெளியிட்டார்.

சூழலியலாளர் ரேவதி அவர்கள் சோகத்துடனே மேடையேறினார். உங்களை எல்லாம் துன்பப் படுத்தப் போகிறேன் என்று கூறி பல துன்பச் செய்திகளைச் சொன்னார். கடலூர் மாவட்டத்தில் 145 சிற்றூர்களை மண் மூடிப்போட்டுவிட்டது. அதுவும் ஆறில் இருந்து பத்தடி வரை மண் சேர்ந்து விட்டது. நாங்கள் ஒரு சிறிய குழுவாக மண்ணை எல்லாம் புல்டோசர் வைத்து அப்புறப்படுத்தி வருகிறோம். அப்பகுதியில் பலர் தற்கொலை செய்து கொண்டு விட்டனர். அவர்களை அந்த தற்கொலை மனநிலையிலிருந்து வெளியில் கொண்டு வருவதைத்தான் முதல் வேலையாகச் செய்கிறோம்.

ஐந்து நதிகள் கூடிய இடம் கூடலூர் அது இப்போது மருவி கடலூர் என்று வழங்கப்படுகிறது. காடாம்புலியூர் என்ற ஊர் எல்லாம் அங்கே இருக்கிறது. புலிகள் வாழும் காடு என்பதுதான் காடாம் புலியூர். அப்படிப்பட்ட ஊர் இன்று மண்மூடிக்கிடக்கிறது. ஒரு கிராமத்தை சரிசெய்ய ரூபாய் ஐந்து இலட்சம் செலவாகிறது. இதுவரை மூன்று ஊர்களில் இருந்த மண்ணை வெளியில் எடுத்திருக்கிறோம். மண்ணை எடுத்துவிட்டோம். இதற்குப் பிறகு எப்படி வேளாண்மை செய்ய முடியும்? அதற்குத்தான் நாங்கள் அவர்களிடம் பழந்தமிழர் வேளாண்மையை பின்பற்றச் சொல்கிறோம். அதையும் சொல்லிக் கொடுக்கிறோம். எண்டோ சல்பான், உரம் போன்ற இரசாயணங்கள் எல்லாம் இப்போது இல்லை. மறுபடியும் அதைப்போட்டு நிலத்தைக் கெடுத்துவிடாமல் பழந்தமிழர் முறையை பின்பற்றச் சொல்லித் தருகிறோம். இயற்கை உரங்களைப் போடுவதற்குச் சொல்லித் தருகிறோம்.

கடலூரில் பராந்தகச் சோழனால் 1200 ஆண்டுகளுக்கு முன்பு பத்தாயிரம் வேலையாட் களை வைத்து பெருமாள் ஏரியை வெட்டினானாம். ஆனால் இதுவரை அந்த ஏரி தூர் வாரப்படவே இல்லை.

சுனாமிக்குப் பிறகு நாங்கள் இந்தோனிசியா விற்கு அழைக்கப்பட்டோம். அங்கிருந்த விவசாயிகள் புலம்பினார்கள். சுனாமியால் நிலம் கெட்டுவிட்டது ஒன்றரை அடிக்கு மணல் மூடிவிட்டது விளைநிலங்களை. சில இடங்களில் அந்த மண்ணை அப்புறப்படுத்திவிட்டு விவசாயம் செய்ய முயன்றால் கொஞ்சம் வளர்கிறது பிறகு செத்து விடுகிறது. பல நாடுகளில் இருந்து விஞ்ஞானிகள் வந்தார்கள் அவர்களாலும் ஒன்றும் செய்ய இயலவில்லை. ஆகவேதான் உங்களை அழைத்தோம் என்று கூறியிருக்கிறார்கள்.

நான் அந்த நிலத்தைப் பார்த்துவிட்டு ஐந்து நிமிடத்தில் அதன் சிக்கலை அவிழ்த்தேன். அதற்கு உதவி செய்தது திருக்குறள்தான். குதிரைக்குளம்புச் செடி அங்கே இருந்தது. அந்தச் செடியைப் பற்றி திருவள்ளுவர் கூறியிருக்கிறார். அந்தச் செடி ஒன்றரை அடிதான் இருக்கும். இங்கேயும் அந்தச் செடி இருக்கிறது. ஒன்ரறை அடிக்குக் கீழ் உங்களது பழைய நிலம் இல்லை அதற்கும் கீழே இருக்கிறது என்று சொன்னேன். அவர்கள் மறுத்தார்கள். பிறகு பார்த்துவிடுவோம் என்று தோண்டினார்கள் நான்கைந்து அடி மண்ணுக்குக் கீழேதான் அவர்கள் விவசாயம் செய்த நிலம் இருந்தது. அந்த அளவிற்கு சுனாமி வேலை செய்திருக்கிறது. பல அடிகள் பல்வேறு வகை மண்ணைப்போட்டு மூடியிருக்கிறது. இந்த நிலையில்தான் கடலூரில் பல ஊர்கள் இருக்கின்றன. அவற்றை நாம் மீட்டெடுக்க வேண்டும். இதை வெளியே சொல்லுங்கள் உதவ முடிந்தவர்கள் உதவுங்கள் என்றார்.

அவர் பேசி முடித்ததும், சென்னை வெள்ளப் பகுதியில் சிறப்பாக பணி செய்த மோசஸ், சொரூப் போன்ற நண்பர்கள் அடங்கிய கிராஸ் கனெக்சன்ஸ் என்ற அமைப்பினர் நாங்கள் ஐம்பதாயிரம் முதலில் தருகிறோம் என்று வாக்குறுதி அளித்தார்கள். ரேவதி அவர்கள், அந்த இளைஞர் களுக்கு நன்றி கூறினார். அவரது அலைபேசி எண்ணைத் தருகிறோம். இதைப் படிப்பவர்களில் யாரேனும் உதவ முன்வந்தால் சூழலியாளர் ரேவதி அவர்களைத் தொடர்பு கொள்ளுங்கள். அலைபேசி எண். 9443343336. Face Book : revivingearth.

சங்கம் 4 நிகழ்வின் அன்றைய நாளில் மழை வெள்ளத்தில் உதவிய பலருக்கு விருதுகள் கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு நாளும் நிறைவில் ஆசிகளை வழங்கினார் இவ்வமைப்பின் தலைவர் முதுநிலை வழக்கறிஞர் திரு. காந்தி அவர்கள். வெகு சிறப்பாகவும் அதே சமயம் அறிவுப்பூர்வமாக நிகழ்வுகளைத் தயாரித்து தமிழர்களை தட்டி எழுப்பி விழிப்புணர்வை விதைத்தார் சங்கம் 4 கருத்தாக்கத்தின் முதல்வர் அருட்திரு. ஜகத் கஸ்பார் அவர்கள். தமிழர்கள் வேர்களுக்குத் திரும்பியதால்வேர்கள் உயிர்பெறுகின்றன.

**இமயவரம்பன்.**

# சஞ்சய் தத்தும் சமகால கைதிகளும்!

அரிமாவளவன்

கண்ணை மூடியிருக்கும் அத்தேவதை கையில் சமமாய் நிற்கும் தராசையும் மறுகையில் வாளேந்தி நிற்பதையும் நமது நீதித்துறைக்கான ஓர் அடையாளமாகப் பார்க்கிறோம். அனைவருக்கும் சமமான நீதி! பாரபட்சமற்ற நீதி! ஆண்டான் அடிமையெல்லாம் இங்கே கிடையாது! என்பதன் அடையாளம்தான் அத்தேவதையின் தராசும் முள்ளும் கட்டப்பட்டிருக்கும் கண்ணும் வாளும்!

1993ஆம் ஆண்டு மும்பை நகரில் பயங்கர வாதிகள் பொதுமக்கள் மீது ஒரு கண்மூடித்தன மான தாக்குதலை நடத்தினார்கள். ஆங்காங்கே குண்டுகள் வெடித்தன! 257 பேர் மாண்டனர். பலர் படுகாயமுற்றனர்! 13 வண்டிகளில் ஆர்.டி.எக்ஸ். எனப்படும் கொடிய வீரியமிக்க வெடிப்பொருட்கள் அதில் பயன்படுத்தப்பட்டன! ஏதோ தனிநபர் பழிவாங்கல் நடவடிக்கைக்காச் செய்யப்பட்டதல்ல அக்கொலைவெறித் தாக்குதல்! இந்திய இறையாண் மையைக் குலுக்கி நடுங்க வைக்க நடத்தப்பட்ட தாக்குதல் அது!

அதில் முதன்மைக் குற்றவாளிகளாகிய தாவூத் இப்ராகிமை இன்னும் தேடுகிறார்கள். டைகர் மேமன் என்பாரையும் தேடிக்கொண்டே இருக்கிறார்கள்! டைகர் மேமனின் உடன்பிறப்பான யாகூப் மேமனும் குண்டு வெடிப்பில் ஈடுபட்டவர் என்று சொல்கிறார்கள். இதில் யாகூப் மேமன் தானாக முன்வந்து சில குற்றங்களை ஒப்புக் கொண்டதாகவும் அவருக்கும் மத்தியப் புலனாய்வுக் கழகம் பாதுகாப்புத் தருவதாக வாக்குக் கொடுத்ததாகவும் பல தகவல்கள் வந்தன! நம்ப வைத்துக் கழுத்தறுத்து விட்டார்கள் என்பது போல, 1994இல் சிறைப்படுத்தப்பட்ட அவருக்கு 2007இல் மரண தண்டனை விதிக்கப்பட்டு கடந்த ஆண்டு 2015இல் அவர் பலத்த சர்ச்சைக்கு நடுவில் தூக்கி லிடப்பட்டார்.

சர்ச்சை என்னவென்றால், நான் உண்மையைச் சொல்லிவிடுகிறேன் என்று யாகூப் மேமன் சொன்னதாகவும் வந்தவரிடம், நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று அரசுத் தரப்பு வாக்குக் கொடுத்த பின்னர் ஏன் தூக்கிலிட்டார்கள்? என்றும் தூக்கிலிட்டால் என்ன நல்லது நடந்து விடும்? என்றும் தூக்கிலிட்டால்தான் மற்றவர் களுக்கு அச்சம் இருக்கும் என்று எதிரும் புதிருமாக பலவாறு கருத்துகள் சொல்லப்பட்டன.

இதற்கிடையில் கடந்த ஆண்டு இவர்களோடு நெருக்கமானவராக இருந்ததாகச் சொல்லப்படும் சோட்டா ராஜன் என்பவரும் இந்தோனேசியாவில் வைத்து தளைப்படுத்ததப்படுகிறார். அவரும் இப்போது சிறையில் இருக்கிறார்.

இந்நிலையில் இந்த வழக்கோடு நெருங்கிய தொடர்புடைய சஞ்சய் தத் என்கிற மும்பை நடிகர் 1996இல் கைது செய்யப்படுகிறார். இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு என்னவென்றால், பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தும்போதும் அதன் பின்னரும் நடைபெறப்போகும் கலவரத்தில் பயன்படுத்துவதற்காக பயங்கர ஆயுதங்களைப் பதுக்கி வைத்திருந்தார். பின்னர் குற்றவாளிகள்



பிடிபடத் தொடங்கியதும் அவ்வாயுதங்களை சிலருடைய உதவியோடு அழிக்க முற்பட்டார்! விசாரணை சவ்வாக இழுத்தது! அதுவும் பசையான பம்பாய் பாய் ஆயிற்றே! பணம் பாதாளம் பாய்ந்து வேதாளம் வேதம் வாசித்திருக்காதா?

1996இல் கைது செய்யப்பட்ட அவர் 18 மாதங்கள் மட்டுமே புனேவுக்கு அரகிலுள்ள ஏர்வாடா சிறையில் இருந்தார். பின்னர் பிணையில் வெளியில் வந்தார். 2013இல் உச்ச நீதி மன்றத் தீர்ப்பு வந்தது. திருவாளர் குமாரசாமி போன்றதோர் புண்ணியவான் அங்கே குந்தியிருக்க வெறும் ஐந்து ஆண்டு தண்டனை என்றது தராசு முள்! அதிலும் பழைய 18 மாதங்களைக் கழித்துக் கொள்ளலாம் என்றது. இப்படி மீண்டும் சிறையில் அடைக்கப் பட்ட அவர் இரண்டு முறை பரோலிலும் இரண்டு முறை விடுப்பிலும் வெளியில் வந்துவிட்டுப் போனார். அவர் விடுதலையாக இன்னும் 100 நாட்களுக்கு மேல் இருக்கிறது! அதற்குள் அவருக்கு அடுத்த சலுகை வந்துவிட்டது. நன்நடத்தை காரணமாக மீதி நாட்களைத் தள்ளுபடி செய்து, வரும் பிப்ரவரி மாதம் 27ஆம் நாள் அவர் வெளியே வரப்போகிறார்!

பொதுமக்கள் நடுவில் கீழ்க்கண்ட கேள்விகள் எழாதா என்ன!

சஞ்சை தத் வைத்திருந்தது துப்பாக்கி உள்ளிட்ட கொலைக் கருவிகள்! துப்பாக்கியை சமையலுக்கா அவர் பயன்படுத்தப் போகிறார்? துப்பாக்கி உள்ளிட்ட கருவிகளை அவரிடம் கொண்டு வந்தவரிடமோ அல்லது யாருடைய தொடர்பில் அக்கருவிகளை அவர் பெற்றாரோ அவர்களிடம் அதை ஏன் தருகிறீர்கள் என்று கேட்காமலா வாங்கி வைத்திருப்பார்? குற்றவாளிகள் அகப்படத் தொடங்கியதால் அவர் கருவிகளை அழிக்க முற்பட்டார். அன்றேல் இன்னும் அவைகள் அவர் கையிலேயே இருந்திருக்கும் அல்லவா? அப்படி யானால் சஞ்சய் தத் தெரியாமல் செய்த குற்றமல்ல அது! இராசீவ் காந்தி கொலைவழக்கில் குற்றம் சாட்டப்பட்ட திரு. பேரறிவாளன் பேட்டரி வாங்கிக் கொடுத்தார் என்பது குற்றச்சாட்டு! பேட்டரியின் பயன்பாடுகள் என்ன? துப்பாக்கியின் பயன்பாடுகள் என்ன?

இரண்டிலும் நோக்கம் குறித்ததான ஐயம் எழுந்தால் சமநிலையோடு பார்ப்பவர்களுக்கு இந்தக் கேள்வியின் நோக்கம் புரியும். பேட்டரியை ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லிக்கூட வாங்கி வர வைத்திருக்கலாம். இராசீவ் காந்தியைக் கொலை செய்யப் புறப்பட்டுப் போகிறவர்கள் சுவரொட்டி அடித்து விளம்பரம் செய்து கொண்டா போகப்போகிறார்கள்? முட்டாள்தனமாகப் போடப் பட்ட அந்த முடிச்சுகள் அவிழ்க்க படாமலேயே குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது! பின்னர் கடுமையான சட்டப் போராட்டத்திற்குப் பிறகு அது வாழ்நாள் தண்டனையாகக் குறைக்கப்பட்டு இன்னும் அவர்கள் சிறைக் கொட்டடிகளிலிருந்து வெளிவர முடியாமல் தவிக்கின்றனர். இதுபோக, அதே குற்றச்சாட்டில் சிறையில் தவிக்கும் சாந்தன் என்பவரும் அரசு தேடிய சாந்தனும் வேறுவேறு ஆட்கள் என்கிறார்கள்!

இப்படியெல்லாம் தில்லு முல்லுகள் நிறைந்த அந்த வழக்கில் தூக்குக் கயிறு இவர்கள் மீது சர்வ சாதாரணமாக வீசி எறியப்பட்டது! இராசீவ் காந்தி கொலை வழக்கில் இது போக, அவிழ்க்கப்படாத பல முடிச்சுகள் இன்னும் உள்ளன! குறிப்பாக அக் கொலையில் திரு சுப்பிரமணியன்சாமியின் தொடர்புகள் இன்னும் கமுக்கமாகவே உள்ளது.

திரு. வீரப்பன் தொடர்புடைய வழக்கிலும் அநியாயமாக குற்றம் சாட்டப்பட்டு சிறையில் வாடும் ஞானப்பிரகாசம், சைமன் உள்ளிட்ட தமிழர்களின் கதியும் அதிர்ச்சியூட்டுவதாக இருக்கிறது.

வீரப்பனால் தாக்குதல் நடத்தப்பட்டதாகச் சொல்லப்பட்ட நாளிலும் அதற்குப் பிறகும் ஒரு பாதிரியாரிடம் திரு. ஞானப்பிரகாசம் தோட்ட வேலை செய்த கொண்டிருந்ததையும் அங்கிருந்தே அவர் காவல்துறை விசாரனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் பொய் வழக்குகள் அவர் மீது சுமத்தப்பட்டு தூக்கு மேடை வரை அவர்கள் சென்று திரும்பியிருக்கிறார்கள். ஆனால் இன்னும் சிறையில் வாடுகிறார்கள்.

நடிகர் சஞ்சய் தத்துக்கு வளைந்து நெளிந்து கூனிக் குறுகி ‘நீதி’ வழங்கும் சட்டம், ‘சலுகை’ காட்டும் அரசு, அப்பாவித் தமிழர்களிடம் மட்டும் ஏன் இந்தக் கொடூர சிந்தனையோடு நடந்து கொள்கிறது? மும்பை குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட 257 பேரும் மாந்தர்களில்லையா? அல்லது இந்தியர்களில்லையா?

மும்பை குண்டு வெடிப்பில் இந்தியாவின் பரம எதிரியாகக் கருதப்படும் பாக்கிஸ்தானின் தொடர்பு இருப்பதாகக் கருதப்பட்டும் சஞ்சய் தத்துக்கு மிக எளிதாக அனைத்து விதச் சலுகைகளும் கிடைக்கின்றன!

அப்பாவித் தமிழர்களுக்கு மட்டும் அவை மறுக்கப்படுவது ஏன்?

●



# இன்றைய வேகமான நாகரிகம் வளர்ந்த வாழ்க்கை சூழலில் மக்கள் இன்சூரன்ஸ் எடுக்கும் விதம்

முகவர்களின் (Agent) வற்புறுத்தல்

நண்பர்களால் ஏற்படுத்தும் அன்பு தொல்லைகள் என்று பாலிசி எடுத்தல்

வரிச்சலுகைக்காக (Tax Decision) பாலிசி கட்டுதல்

வங்கி கடன் வாங்கும் போது கட்டாயமாக இன்சூரன்ஸ் எடுத்தல்

தற்பெருமைக்காக இன்சூரன்ஸ் எடுத்தல்







இதுபோன்ற காரணங்கள் தங்களை தேடி வருவதால் 90% மக்கள் இன்சூரன்ஸ் எடுத்துக் கொள்கின்றார்கள் ஆனால் இவை மட்டும் அல்ல லைஃப் இன்சூரன்ஸ்சின் முக்கியத்துவம்

பலன்கள்

பாதுகாப்பு

வருமானவாய்ப்பு




– மேலும் விரிவாக பல அருமையான செய்திகளை வரும் இதழினில் காண்போம்.

K.RAGHAVENDAR.BE.,MBA.,
(Vp-Sales) 9080807123

J.THIRUMAVALAVAN.M.A.,Grade.,
(IBP - Sales) 93444 60122

## "A" INSURANCE CARE ADVISORY

16c, Sai Baba Street, 100 Feet Road, Ramanar Nagar,
Mudhaliarpet, Puducherry-605 004.
Tel: 0413 2913000
Email: icanet2014@gmail.com / Web: www.icanet.in



Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5, Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 weavers street triplicane, chennai-5, Editor: **V. THALAPATHI.**


உச்சிஷ்ட மகா கணபதி துணை
மகிழ்ச்சியுடனும் ! மனநிறைவோடும் !
வாழ்க வளமுடன் !!
"OHM SHAKTHE"
உயர்கணித நட்சத்திர சோதிட நிலையம்
K.P-K.B ஜோதிட எண்கணிதம், வாஸ்து நிபுணர்
ஜோதிட ஆதித்யா
TSV.NAVEENKUMMAR
@
C.V.SELVAKKUMAR.M.A.,(Astro)
துல்லியமான ஜாதகப்பலன்கள்,
நியூமராலஜி முறைபடி பெயர் மாற்றம்,
திருமண பொருத்தம்,
திருமணம் தடைபடுதல்,
குழந்தை பாக்கியமின்மை,
தொழில் தடை ,
வியாபாரம் நஷ்டம்,
காரியத்தடை நீக்குதல்,
தோஷ பரிகாரம்,
நாக தோஷம், செவ்வாய் தோஷம், புனர்பூ தோஷம்,
வாஸ்து குறைபாடுகளால் ஏற்படும் தோஷம்கள்
அனைத்தவித தோஷங்கள் நீங்குவதற்கு சரியான
பரிகாரங்களை கூறி பிரச்சனைகளுக்கு வெற்றிகரமாக
தீர்வு கண்டு வருகிறார்.
275, சுதாகர் நகர், ( பொன்னியம்மன் கோவில் அருகில் )
செஞ்சி ரோடு, திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம்.
தொடர்புக்கு: 9486294906, 9486160219
மின்னஞ்சல் :ohm.shakthe@gmail.com

MUTRAM - Tamil & English Monthly R.Dis No. 1678-2012
RNI No. TNBIL/2010/36924. REGISTERED TN / CC ( S ) DN / 496 / 14 - 16.
Date of Publication 7th of every month

சேர்வோம் உயர்வோம் !

# செந்தமிழ்நாடு ஊடகவியலாளர்கள் சங்கம்

அரசு பதிவு பெற்றது






விசவனூர்.வே.தளபதி
தலைவர்

அனைவருக்கும்
## தாய் மொழி தின நல்வாழ்த்துகள்



எஸ்.ரங்கநாதன்.
செயலாளர்



எஸ்.வி.ஜெய்.இமயவரம்பன்
பொருளாளர்



எஸ்.ஜெபக்குமார்
அமைப்புச் செயலாளர்

ஊடகவியலாளர்கள்
உரிமைகளைக் காப்போம் !

உலகம் வியக்க
ஒன்றாய்த் திரள்வோம் !

## செய்தி ஊடக நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

உறுப்பினராகுங்கள், நமக்குரிய உரிமைகளையும்
சலுகைகளையும் வென்றெடுப்போம்.

செந்தமிழ்நாடு ஊடகவியலாளர்கள் சங்கம்
எண் 124, என்.டி.ஆர். தெரு, இரங்கராசபுரம்,
கோடம்பாக்கம், சென்னை 600 024.
தொலைபேசி: 044-42154408, அலைபேசி : 8056281973.